தினபூமி
thinaboomi.com
பூமி: 22 சுற்று: 08 மார்கழி 20
RNI Regn. No. 61494/94
வேலூர், ஞாயிறு, ஜனவரி 04, 2026
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**வெனிசுலா அதிபர் மதுரோவை சிறைப்பிடித்த அமெரிக்க ராணுவம்: நாடு கடத்தப்பட்டதாக ட்ரம்ப் அறிவிப்பு**
....2-ம் பக்கம்

**ஏற்றுமதியாளர்கள் கடன் பெற ரூ.7 ஆயிரம் கோடியில் திட்டம் மத்திய அரசு அறிவிப்பு**
...3-ம் பக்கம்

**நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடர்; இந்திய அணி அறிவிப்பு**
....6-ம் பக்கம்



## மாநில அரசு ஊழியர்களின் இருபது ஆண்டுகால கோரிக்கைகள் ஏற்பு

## பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு பதிலாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள

# தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்

## ✦ முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு ✦ அரசு ஊழியர்கள் சங்கம் வரவேற்பு

சென்னை, ஜன. 04-

**பழைய ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிலாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்ட'த்தை செயல்படுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். முதல்வரின் அறிவிப்புக்கு அரசு ஊழியர்கள் சங்கம் ஜாக்டோ ஜியோ வரவேற்பு தெரிவித்துள்ளது.**

### பேச்சுவார்த்தை...

பழைய ஓய்வூதியத் திட்டம், காலிப் பணியிடங்களை நிரப்புதல், சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ, போட்டா-ஜியோ உள்ளிட்ட அமைப்புகள் போராட்டம் நடத்தி வருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) ஜாக்டோ-ஜியோ, போட்டா-ஜியோ சங்கப் பிரதிநிதிகளை தனித்தனியாக அழைத்து அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

### முதல்வர் உத்தரவு...

அதையடுத்து ஓய்வூதியம் தொடர்பாக முதல்வர் நேற்று (சனிக்கிழமை) முக்கிய அறிவிப்பை வெளியிடுவார் என்று அமைச்சர்கள் உறுதியளித்ததாக ஜாக்டோ-ஜியோ, போட்டா-ஜியோ சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். அதன்படி புதியதாக உருவாக்கப்பட்ட 'தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

### இருபதாண்டு கால...

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபதாண்டு காலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

### அக்கறையுடன்....

ஆட்சி என்கிற வாகனத்தின் சக்கரங்களாக இருக்கக் கூடியவர்கள் அரசு அலுவலர்கள். அந்தச் சக்கரங்கள், மக்களுக்காக அரசு செயல்படுத்தும் திட்டங்களை கடைக்கோடி மனிதர் வரை கொண்டு சேர்க்கப் பயணிக்கின்றன. அதை உணர்ந்துள்ள அரசுதான் கலைஞர் வழிவந்த திராவிட மாடல் அரசு. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் காப்பதில் கலைஞர் வழியில் எப்போதும் அக்கறையுடன் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

### பல்வேறு நடவடிக்கை

2021-ம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றது முதல், அனைத்துத் தரப்பு மக்களின் நலன்களையும் காக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் மக்களுக்குக் கொண்டு செல்லும் மகத்தான பணியை மேற்கொண்டு, அரசின் கரங்களாக விளங்கக்கூடிய அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக் காத்திடத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் முதல்வர் தலைமையிலான இந்த அரசு எடுத்து வருகிறது.



● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, தலைமைச் செயலகத்தில், ஜாக்டோ-ஜியோ, தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம், பல்வேறு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபதாண்டுகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை " செயல்படுத்திட முதல்வர் ஆணையிட்டமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டு, இனிப்புகளை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நிதிச்சுமைகளை...

தொடர்ந்து குறைக்கப்படும் மத்திய அரசின் வரிப்பகிர்வு, திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதி குறைக்கப்படுவது அல்லது முறையாக விடுவிக்கப்படாமல் இருப்பது, தமிழ்நாடு முன்னெப்போதும் கண்டிராத வளர்ச்சியை எட்டியிருப்பினும், மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள ஜி.எஸ்.டி. மாற்றங்களால் குறைந்து வரும் மாநிலத்தின் வரி வருவாய், உயர்ந்து வரும் நலத்திட்டச் செலவுகள் போன்றவற்றால் ஏற்படும் நிதிச்சுமைகளையும் தாண்டி, முதல்வர் , அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைத் தொடர்ந்து காத்து வருகிறார்.

### அகவிலைப்படி உயர்வு...

அந்தவகையில், கோவிட் பெருந்தொற்று காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அகவிலைப்படி உயர்வை 2022ஆம் ஆண்டு முதல் மத்திய அரசிற்கு இணையாக உயர்த்தி வழங்கியதோடு, மத்திய அரசுக்கு இணையாக காலதாமதமின்றி அகவிலைப்படி உயர்வு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று, 01.10.2025 முதல் அரசுப் பணியாளர்கள் தங்களது ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்து பணமாகப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையை மீண்டும் அரசு செயல்படுத்தியுள்ளது.

### பல்வேறு உதவிகள்...

நாட்டிலேயே வேறெங்கும் இல்லாத புதிய திட்டமாக அரசுப் பணியாளர்கள், விபத்தில் உயிரிழக்க நேர்ந்தால், 1 கோடி ரூபாயும், இயற்கை மரணமடைந்தால் 10 லட்சம் ரூபாயும், ஆயுள் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. பணியிடை மரணமடையும் அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கு ரூபாய் ஐந்து லட்சம் முதல் ரூபாய் 10 லட்சம் வரை திருமணச் செலவிற்கான உதவியாகவும், மேலும், உயர்கல்வி பயில ரூபாய் 10 லட்சம் வரை நிதியுதவியும் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அரசு

(கடைசி பக்கம் பார்க்க)

### புதிய ஓய்வூதியத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1) மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இவ்வாறு 50 சதவீதத்திற்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு, பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்திற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.
2) 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டுதோறும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்.
3) ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.
4) அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 லட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும்.
5) புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டபின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.
6) பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியில் சேர்ந்து, புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் இடைப்பட்ட காலத்தில் ஓய்வூதியம் இன்றி பணி ஓய்வு பெற்றவர்களுக்கு சிறப்பு கருணை ஓய்வூதியம் வழங்கப்படும்.

---

திி.மு.க. தேர்தல் அறிக்கை தொடர்பாக

## மக்களிடம் கருத்து கேட்க புதிய செயலி அறிமுகம்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்



சென்னை, ஜன. 04-

**தி.மு.க. தேர்தல் அறிக்கை தொடர்பாக மக்களிடம் கருத்து கேட்க புதிய செயலியை முதல்வர் மு.க. ஸ்டாலின் துவக்கி வைத்தார்.**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;- எல்லார்க்கும் எல்லாம் என்ற சீரிய சிந்தனையோடு ஆட்சி செய்து வரும் கழகத்தலைவர், வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கழகத்தின் தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பொருட்டு , கழகத் துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் அமைச்சர்கள் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா, கோவி செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, எழிலன், முன்னாள் எம்.பி டிகேஎஸ் இளங்கோவன், அப்துல்லா, கார்த்திகேய சிவசேனாபதி, கான்ஸ்டண்டைன் ரவீந்திரன், முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி ஜி. சந்தானம், தொழிலதிபர் சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 பேர் அடங்கிய தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவை அமைத்திருந்தார். இக்குழுவினர் பொதுமக்கள் , வணிகர்கள், விவசாயிகள், இளைஞர்கள் , பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களையும் நேரடியாக சந்தித்து பரிந்துரைகளை பெரும் பொருட்டு தமிழ்நாடு முழுக்க பயணம் செய்ய உள்ளனர்.


துவக்க நிகழ்வாக அண்ணா அறிவாலயத்தில் நேற்று (03.02.2026 சனிக்கிழமை) கழகத் தலைவர் பொதுமக்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெறும் வகையிலான அலைபேசி எண், வலைதள விவரம், சமூக வலைதள தொடர்புகள், செயற்கை நுண்ணறிவு வலைவாசல் ஆகியவற்றை அறிமுகம் செய்து வைத்தார். பொதுமக்கள் கீழ்கண்ட தளங்களின் மூலம் கருத்துக்களையும்

(கடைசி பக்கம் பார்க்க)

---

## வரும் 9-ம் தேதி முதல் அ.தி.மு.க. வேட்பாளர் நேர்காணல் துவக்கம்

### எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



சென்னை, ஜன. 04-

**ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள எம்.ஜி.ஆர். மாளிகையில் அ.தி.மு.க.வில் வேட்பாளர் நேர்காணல் ஜன.9-ம் தேதி முதல் ஜன.13-ம் தேதி வரை நடைபெற உள்ளதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.**

அ.தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- தமிழ்நாடு சட்டசபை தேர்தல், புதுச்சேரி மற்றும் கேரள மாநில சட்டசபை தேர்தல்களில் அ.தி.மு.க. சார்பில் வேட்பாளராக போட்டியிட வாய்ப்பு கோரி, விருப்ப மனு அளித்துள்ளவர்களுடனான நேர்காணல் சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக எம்.ஜி.ஆர். மாளிகையில் 9-1-2026 வெள்ளிக்கிழமை முதல் 13-1-2026 செவ்வாய்க்கிழமை வரை நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:-

9-1-2026 காலை - கோவை மாநகர், கோவை புறநகர் வடக்கு, கோவை புறநகர் தெற்கு, நீலகிரி, திருப்பூர் மாநகர், திருப்பூர் புறநகர் கிழக்கு, திருப்பூர் புறநகர் மேற்கு, நாமக்கல், சேலம் மாநகர். மாலை - சேலம் புறநகர், ஈரோடு மாநகர், ஈரோடு புறநகர் கிழக்கு, ஈரோடு புறநகர் மேற்கு, கரூர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு.

10-1-2026 காலை - கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தஞ்சாவூர் கிழக்கு, தஞ்சாவூர் மேற்கு, தஞ்சாவூர் மத்தியம், தஞ்சாவூர் தெற்கு, சிவகங்கை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாநகர், திருநெல்வேலி புறநகர், விருதுநகர் கிழக்கு. மாலை - திருவாரூர், மதுரை மாநகர், மதுரை புறநகர் கிழக்கு, மதுரை புறநகர் மேற்கு, தேனி கிழக்கு, தேனி மேற்கு, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு.

11-1-2026 காலை - விருதுநகர் மேற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் வடக்கு, கடலூர் தெற்கு, கடலூர் மேற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி புறநகர் வடக்கு. மாலை - திருச்சி மாநகர், திருச்சி புறநகர் தெற்கு, பெரம்பலூர், அரியலூர், கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தர்மபுரி.

12-1-2026 காலை - விழுப்புரம், கள்ளக்குறிச்சி, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு. மாலை - திருவண்ணாமலை கிழக்கு, திருவண்ணாமலை மத்தியம், வேலூர் மாநகர், வேலூர் புறநகர், ராணிப்பேட்டை கிழக்கு, ராணிப்பேட்டை மேற்கு, திருப்பத்தூர்.

13-1-2026 காலை - திருவள்ளூர் வடக்கு, திருவள்ளூர் மத்தியம், திருவள்ளூர் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, காஞ்சீபுரம், செங்கல்பட்டு கிழக்கு, செங்கல்பட்டு மேற்கு, தென்சென்னை வடக்கு (கிழக்கு), தென்சென்னை வடக்கு (மேற்கு), தென்சென்னை தெற்கு (கிழக்கு), தென்சென்னை தெற்கு (மேற்கு). மாலை - புதுச்சேரி மாநிலம், கேரளா மாநிலம், சென்னை புறநகர், வடசென்னை வடக்கு (கிழக்கு), வடசென்னை வடக்கு (மேற்கு), வடசென்னை தெற்கு (கிழக்கு), வடசென்னை தெற்கு (மேற்கு).

இந்த நேர்காணலில், கட்சி அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களுக்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிகளுக்கு விருப்ப மனு அளித்துள்ளவர்கள், தொகுதி பற்றிய நிலவரங்கள் மற்றும் வெற்றி வாய்ப்பு பற்றிய நிலவரங்களை அறிந்திட தங்களுக்காக விருப்ப மனு அளித்துள்ளவர்கள் மட்டும், விருப்ப மனு பெற்றதற்கான அசல் ரசீதுடன் தவறாமல், தலைமைக் கழகத்திற்கு வருகை தந்து, நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
| --- | --- |
| 573.41 | 182.00 |
| பாயிண்ட் 85,762.01 | பாயிண்ட் 26,328.55 |



**தங்கம்**
1 சவரன் ₹1,00,800
1 கிராம் ₹12,600



**வெள்ளி**
1 கிலோ ₹257,000
1 கிராம் ₹257.00

**டாலர்** ₹90.01

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

# வெனிசுலா அதிபர் மதுரோவை சிறைப்பிடித்த அமெரிக்க ராணுவம்

## நாடு கடத்தியதாக அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

**நியூயார்க், ஜன. 04-**

வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோவை சிறைப்பிடித்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

வெனிசுலா நாட்டின் தலைநகர் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்ட நிலையில், அந்நாட்டு அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியையும் அமெரிக்க படைகள் கைது செய்து, நாடுகடத்தியதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

வெனிசுலாவிருந்து போதைப் பொருள் கடத்தப்படுவதாக ட்ரம்ப் குற்றஞ்சாட்டி வந்தநிலையில்,



வெனிசுலா மீது அமெரிக்க படை தாக்குதல் நடத்தியது. மேலும், வெனிசுவேலாவில் உள்ள அமெரிக்கர்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

போதைப் பொருள் பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த சில மாதங்களாக வெனிசுலா அரசுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். போதைப் பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்ட அமைப்புகளுடன் இணைந்து வெனிசுலா செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டியதுடன், மதுரோ கடுமையாக விளையாடினால், அதுதான் கடைசி விளையாட்டாக இருக்கும் என்று கிறிஸ்துமஸ் தினத்தன்று ட்ரம்ப் எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

# ஹெலிகாப்டர் விபத்தில் 4 பேர் பலி

**வாஷிங்டன், ஜன. 04-**

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில், 4 பேருடன் சென்ற ஹெலிகாப்டர் மலையில் மோதி விபத்துக்குள்ளானது. கோர விபத்தில் ஹெலிகாப்டரில் பயணித்த 4 பேரும் உயிரிழந்தனர். மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி காலை 11 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்து தொடர்பாக அமெரிக்க விமான போக்குவரத்து நிர்வாக அமைப்பு விசாரணை மேற்கொண்டு வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, விபத்து நடைபெற்ற பகுதி வழியாக விமான போக்குவரத்து தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தவர்களில் பைலட்டைத் தவிர, ஏனைய மூன்று பேரும் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களை இழந்து துயரத்தில் உள்ள குடும்பத்தினருக்கு மனத் தைரியம் அளிக்க இறைவனை வேண்டிக் கொள்வதாக அந்த மாநில ஷெரிப் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில் நேற்று, சிறுபான்மையினர் கல்வி நிலையங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் நேரில் சந்தித்து, சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# மெக்சிகோவில் திடீர் நிலநடுக்கம்

**மெக்சிகோ சிட்டி, ஜன. 04-**

தெற்கு மற்றும் மத்திய மெக்சிகோவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவில் 6.5 ஆக பதிவானதாக மெக்சிகோவின் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் அகபுல்கோவிலிருந்து வடகிழக்கே சுமார் 57 மைல்கள் தொலைவில் 35 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் காரணமாக கட்டிடங்கள் குலுங்கியதால் அச்சமடைந்த மக்கள், வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்தனர். பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதாகவும், சில இடங்களில் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. நிலநடுக்கம் காரணமாக இருவர் உயிரிழந்துள்ளனர். பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

## சத்தீஸ்கரில் 2 இடங்களில் என்கவுண்டர்:

# 14 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை

**ராய்பூர், ஜன. 04-**

சத்தீஸ்கரில் பதுங்கிருந்த 14 நக்சலைட்டுகளை என்கவுண்டரில் பாதுகாப்பு படையினர் சுட்டு கொன்றனர்.

சத்தீஸ்கர், ஒடிசா, ஜார்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் நக்சலைட்டுகள் அச்சுறுத்தலாக இருந்து வந்தனர். அவர்களை ஒழிக்கும் பணிகளில் மத்திய அரசு தொடர்ந்து தீவிரம் காட்டி வருகிறது. இந்த நிலையில் சத்தீஸ்கர் மாநிலத்தில் நேற்று நடந்த இரண்டு என்கவுண்டர் சம்பவங்களில் 14 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சுக்மா மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் போலீசார் நேற்று அதிகளவில் அந்தப் பகுதிக்கு விரைந்தனர். அவர்களைப் பார்த்ததும் மறைந்து இருந்த நக்சலைட்டுகள் துப்பாக்கியால் சுட்டனர்.பாதுகாப்புப் படை வீரர்கள் பதில்தாக்குதலில் ஈடுபட்டனர். பாதுகாப்புப் படை வீரர்கள் நடத்திய அதிரடியான தாக்குதலில் 12 நக்சலைட்டுகள் குண்டு பாய்ந்து பலியானார்கள். தொடர்ந்து அந்தப் பகுதியில் நக்சலைட்டுகள் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது.

இதேபோல் பிஜாப்பூர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியிலும் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பது தெரிய வந்தது. இந்த ரகசிய தகவல் அடிப்படையில் பாதுகாப்புப் படை வீரர்கள் அங்கு சென்று அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டனர். இதில் 2 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த இரண்டு என்கவுண்டர் சம்பவங்களில் இருந்து 14 நக்சலைட்டுகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

என்கவுண்டர் நடந்த இடத்தில் இருந்து ஏ.கே.47 ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சுக்மாவில் நடந்த அதிரடி தாக்குதல் மூலம் கோண்டா பகுதி நக்சலைட்டுகள் குழு கிட்டத்தட்ட முழுமையாக அழிக்கப்பட்டதாக போலீஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சத்தீஸ்கரில் கடந்த ஆண்டில் 285 நக்சலைட்டுகளை பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டுக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வரம்பை மீறும் குரோக் ஏ.ஐ.:

# எக்ஸ் தளத்திற்கு மத்திய அரசு நோட்டீஸ்

**புதுடெல்லி, ஜன. 04-**

வரம்பை மீறும் குரோக் ஏ.ஐ. மற்றும் எக்ஸ் தள நிறுவனம் 72 மணி நேரத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மத்திய அரசு அதிரடியாக நோட்டீஸ் பிறப்பித்துள்ளது.

ஏ.ஐ. பயன்படுத்தி உருவாக்கப்படும் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் விதமாகவும் அமைகின்றன. இந்த நிலையில், எலான் மஸ்க்கின் குரோக் ஏ.ஐ., பெண்களை மையப்படுத்தி ஆபாசமாகவும் நாகரிகமற்ற முறையிலும் படங்களை உருவாக்குவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது குறித்து மத்திய அரசுக்கும் புகார்கள் சென்றன.

இதனையடுத்து, இந்த விவகாரத்தில் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் அதிரடியாக நோட்டீஸ் பிறப்பித்துள்ளது. தகவல் தொழில்நுட்பச் சட்டம் மற்றும் 2021-ம் ஆண்டின் ஐடி விதிகள் ஆகியவற்றின் கீழ், எக்ஸ் நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. பயனர்களின் தனியுரிமை மற்றும் கண்ணியத்தை மீறும் வகையில் செயற்கையாக படங்கள் மற்றும் வீடியோக்கள் குரோக் ஏ.ஐ. மூலம் உருவாக்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்களின் கணக்குகளை ரத்து செய்ய வேண்டும்; மோசமாக சித்தரிக்கப்பட்ட படங்களை நீக்க வேண்டும்; 72 மணி நேரத்திற்குள் இது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இதை மீறும் பட்சத்தில் உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேட்டூர் அணை நீர்மட்டம் சரிவு

**மேட்டூர், ஜன. 04-**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 103.30 அடியாக இருந்த நிலையில், நேற்று 102.56 கன அடியாக குறைந்தது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து கடந்த 6 நாட்களாக படிப்படியாக குறைந்து கொண்டே இருந்த நிலையில், நேற்று சற்று அதிகரித்தது. நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 164 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இந்த நீர்வரத்தானது நேற்று சற்று அதிகரித்து வினாடிக்கு 233 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்தது.

அணையில் இருந்து காவிரி டெல்டா மற்றும் கால்வாய் பாசன தேவைக்காக வினாடிக்கு 11 ஆயிரத்து 400 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அணைக்கு நீர்வரத்து மிகவும் குறைந்து வருவதால் மேட்டூர் அணை நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது.

நேற்று முன்தினம் காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 103.30 அடியாக இருந்த நிலையில், நேற்று 102.56 கன அடியாக குறைந்துள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

## வெனிசுலா மீது அமெரிக்கா தாக்குதல்:

# ஐ.நா. உடனடியாக தலையிட கொலம்பியா வலியுறுத்தல்

**கராகஸ், ஜன. 04-**

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் தலைநகர் கராகஸ் நகரில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சுமார் 7 இடங்களில் வான்வழி தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த தாக்குதல்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. தாக்குதல் காரணமாக வெனிசுலா ராணுவ தளத்திற்கு அருகில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. வெனிசுலாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்படுவதாவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வெனிசுலா மீது அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்துவதாகவும், இந்த விவகாரத்தில் ஐ.நா. உடனடியாக தலையிட வேண்டும் என்றும் கொலம்பியா அதிபர் குஸ்டாவோ பெட்ரோ வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், காந்த பல மாதங்களாக, வெனிசுலாவில் உள்ள இலக்குகள் மீது விரைவில் தாக்குதல் நடத்த உத்தரவிடப்போவதாக மிரட்டி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டால்

# அமெரிக்க தளங்கள் மீது தாக்குதல் நடத்துவோம்

## ஈரான் எச்சரிக்கையால் திடீர் பதற்றம்

**டெஹ்ரான், ஜன. 04-**

ஈரானின் உள்விவகாரங்களில் தலையிட்டால் அமெரிக்க தளங்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்ததை அடுத்து போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஈரான் நாட்டில் விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். சில இடங்களில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. போராட்டக்காரர்கள் போலீசாருடன் மோதியதாகவும், கற்களை வீசியதாகவும், வாகனங்களை எரித்ததாகவும் உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகி வருகிறது. சிலர் ஆயுதமேந்தி தாக்குதலில் ஈடுபட்டதாகவும், பல்வேறு நபர்களிடமிருந்து துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அமைதியான போராட்டங்களுக்கு எதிராக ஈரான் அரசு வன்முறையை பயன்படுத்தினால், அமெரிக்க அரசு களத்தில் இறங்கி பதிலடி கொடுக்க தயாராக உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் எச்சரித்திருந்தார். ட்ரம்பின் இந்த கருத்துக்கு ஈரான் தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் அலி லாரிஜானி கூறுகையில், "ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டால், அது பிராந்திய அளவில் குழப்பத்தை விளைவிக்கும். அமெரிக்க நலன்கள் சிதைக்கப்படும். ட்ரம்ப் ஆபத்தான விளையாட்டை தொடங்கியுள்ளார். அமெரிக்க மக்கள் தங்கள் வீரர்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்" என சாடினார். ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் கலிபாப் கூறுகையில், "அமெரிக்காவின் அனைத்து ராணுவ தளங்களும் எங்கள் இலக்குகளாக மாறும்" என்று மிரட்டல் விடுத்துள்ளார். இதனால் இருநாடுகளுக்கும் இடையே போர்பதற்றம் உருவாகியுள்ளது.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு

**சென்னை, ஜன. 04-**

ஒரு சவரன் தங்கம் ரூ.640 உயர்ந்து, ரூ.1,00,800-க்கு விற்பனையானது. இதே போல் வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து, ரூ.257-க்கு விற்பனையானது. அதன்படி ஒரு கிலோ வெள்ளி ரூ.1,000 உயர்ந்து, ரூ.2,57,000-க்கு விற்பனையானது.

தங்கத்தின் விலை கடந்த ஓரிரு வாரங்களுக்கு முன்பு 1 லட்சம் ரூபாயை எட்டிய நிலையில், கடந்த டிசம்பர் 31-ம் தேதி ஒரு சவரன் தங்கம் ரூ.1 லட்சத்துக்கு கீழ் வந்தது. தொடர்ச்சியாக தங்கம் விலையில் சரிவு காணப்பட்டது. நேற்று தங்கம் விலை கிராமுக்கு ரூ.140-ம், சவரனுக்கு ரூ.1,120-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.12,580-க்கும், ஒரு சவரன் ரூ.1,00,640-க்கும் விற்பனையானது.



நேற்று காலை நிலவரப்படி தங்கத்தின் விலை சற்று குறைந்து விற்பனையானது. சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.480 குறைந்து ஒரு சவரன் ரூ.1,00,160-க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.60 குறைந்து, ஒரு கிராம் ரூ.12,520-க்கு விற்பனையானது. வெள்ளி விலையும் நேற்று காலை நிலவரப்படி கிராமுக்கு ரூ.4-ம், கிலோவுக்கு ரூ.4 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் வெள்ளி ரூ.256-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2 லட்சத்து 56 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

இந்த நிலையில், நேற்று மாலை நிலவரப்படி தங்கத்தின் விலை அதிகரித்து விற்பனையானது. இதன்படி ஒரு கிராம் ஆபரண தங்கத்தின் விலை நேற்று காலை ரூ.60 குறைந்த நிலையில், மாலை ரூ.80 உயர்ந்து, ரூ.12,600-க்கு விற்பனையானது.

தற்போது ஒரு சவரன் தங்கம் ரூ.640 உயர்ந்து, ரூ.1,00,800-க்கு விற்பனையானது. இதே போல் வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து, ரூ.257-க்கு விற்பனையானது. அதன்படி ஒரு கிலோ வெள்ளி ரூ.1,000 உயர்ந்து, ரூ.2,57,000-க்கு விற்பனையானது


# சிக்கிம் சோரெங்கில் நிலநடுக்கம்

**புதுடெல்லி, ஜன. 04-**

சிக்கிம் சோரெங் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. காலை 5.58 மணியளவில் ரிக்டர் அளவில் 3.9 ஆக நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

5 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 27.21 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 88.24 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

**04-01-2026**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** மனையாளின் ஒத்துழைப்பு மட்டற்ற மகிழ்ச்சி தரும். தனவரவு கூடும். புதிய முகநூல் நண்பர்கள் சேர்க்கையால், புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும்.

**ரிஷபம்:-** வீட்டிலும் வெளியிலும் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. சிலர் துக்க நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள நேரலாம். கல்வியில் தடைகள் ஏற்படலாம். பயணங்களில் கவனம் தேவை.

**மிதுனம்:-** நன்கு உடை உடுத்தி, நாகரீகமாக, மிடுக்காக மற்றவர்களை கவரும் வண்ணம் நடந்துகொள்வீர்கள். உங்கள் தேஜஸ் கூடும். தேவைக்கு அதிகமாகவே தனவரவு உண்டாகும்.

**கடகம்:-** இடமாற்றங்கள் ஏற்படலாம். மங்கையரால் ஏற்படும் மாறாத செலவுகளால் பணமுடை ஏற்பட்டுக் கடன் பெறும் சூழ்நிலை உருவாகலாம். உண்ணவும் நேரமின்றி உழைக்க நேரிடும்.

**சிம்மம்:-** இன்று விருப்பங்கள் யாவும் நிறைவேறும். அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆதரவால் முன்னேற்றம் கிடைக்கும். நம்பிக்கைக்கு உரிய நல்லவர்களின் நிரந்தர நட்பு கிடைக்கும்.

**கன்னி:-** பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் ஏற்படும். தொழிலில் முன்னேற்றம், பணியில் இருப்பவர்களுக்கு பதவிவுயர்வு கிடைக்கும்.

**துலாம்:-** வியாபாரப் பயணங்கள் மூலம் வெற்றி கிட்டும். புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் எண்ணம் எழும். நிரந்தர மதநம்பிக்கை ஏற்படும். தொழில் புரிவோருக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவால் இலாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:-** வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. பிறருக்கு எப்போதும் நல்லதே நினையுங்கள். அதிகாரிகள் ஆணையை ஏற்று நடந்தால் முன்னேற்றம் ஏற்படும்.

**தனுசு:-** இனிய பேச்சாலும் சாதுர்யத்தால், எடுத்த காரியங்கள் யாவற்றிலும். வெற்றி அடைவது உறுதி, அனைவரையும் கவர்வீர்கள். புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம்.

**மகரம்:-** பயணத்தில் சுகானுபவங்கள் ஏற்படும். தேவை ஏற்படும் போது நண்பர்கள் மறுக்காது உதவி செய்வார். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**கும்பம்:-** குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள். வண்டி வாகனங்களில் செல்லும் போது மிகவும் எச்சரிக்கையுடன் செல்லவும். எல்லாவிதத்திலும் செலவுகள் கூடும்.

**மீனம்:-** எடுக்கும் காரியங்கள் அனைத்தும் ஏனோதானோ என முடிக்கும் சூழ்நிலை உருவாகும். இயலாமை காரணமாக இல்லத்தில் உள்ளவர்கள் மீது ஏற்படும் எரிச்சலை குறைத்தால் மகிழ்ச்சி நிலவும்.

## வெனிசுலா மீது அமெரிக்கா தாக்குதல்:

# ரஷ்யா, ஈரான் கடும் கண்டனம்

**மாஸ்கோ, ஜன. 04-**

வெனிசுலா மீதான தாக்குதலுக்கு கியூபா, கொலம்பியா மற்றும் ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவிற்குள் போதைப்பொருள் கடத்தப்படுவதாகவும், இதனால் அமெரிக்க இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகும் சூழல் ஏற்படுவதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறி வந்தார். மேலும் போதைப்பொருள் கடத்தலுக்கு அமெரிக்க அதிபர் நிகோலஸ் மதுரோ உடந்தையாக இருப்பதாக டிரம்ப் பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தார்.

இதனிடையே, வெனிசுலா கடற்பகுதியில் அமெரிக்க கடற்படை ரோந்து பணியில் ஈடுபட்டது. அப்போது வெனிசுலாவில் இருந்து போதைப்பொருள் கடத்தி வந்ததாக கூறி பல்வேறு கப்பல்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ, அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை முறியடிப்போம் என சூளுரைத்தார்.

இந்த சூழலில், வெனிசுலாவின் தலைநகர் கராகஸ் நகரில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சுமார் 7 இடங்களில் அமெரிக்க ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியது. தாக்குதல் காரணமாக வெனிசுலா ராணுவ தளத்திற்கு அருகில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. வெனிசுலாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்படுவதாவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து, வெனிசுலா நாட்டின் அதிபரும், அவரது மனைவியும் நாடு கடத்தப்பட்டதாக டிரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "வெனிசுலா மீது அமெரிக்கா வெற்றிகரமான தாக்குதலை நடத்தியுள்ளது. வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவும், அவரது மனைவியும் சிறைபிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அமெரிக்க சட்ட அமலாக்கத் துறையுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், வெனிசுலா மீதான தாக்குதலுக்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வெனிசுலா மீதான அமெரிக்காவின் தாக்குதல் ஆயுதமேந்திய ஆக்கிரமிப்பு. இந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக கூறப்படும் சாக்குப்போக்குகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

நம்பிக்கையின் அடிப்படையில் உறவுகளை கட்டியெழுப்புவதற்கான விருப்பத்தை விட, சித்தாந்த ரீதியிலான விரோதம் மேலோங்கியுள்ளது. வெனிசுலா மக்களுக்கு ரஷ்யா தனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே போல், வெனிசுலா மீதான தாக்குதலுக்கு ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல் வெனிசுலாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறும் செயல் என ஈரான் தெரிவித்துள்ளது. இதே போல், வெனிசுலா மீதான தாக்குதலுக்கு கியூபா, கொலம்பியா ஆகிய நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# தெலங்கானாவில் 20 மாவோயிஸ்டுகள் சரண்

**ஐதராபாத், ஜன. 04-**

தெலங்கானாவில், மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த தேடப்பட்டு வந்த மூத்த தளபதி பட்ஸே சுக்கா (எ) தேவா தலைமையிலான 19 மாவோயிஸ்டுகள், நேற்று (ஜன. 3) காவல் துறை அதிகாரிகள் முன்னிலையில் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சரணடைந்துள்ள மாவோயிஸ்டுகள் அனைவரும் தங்களது ஆயுதங்களையும் ஒப்படைத்துள்ளனர். மேலும், அவர்கள் அனைவரின் மறுவாழ்விற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களின் கீழ் ரூ.1.82 கோடி நிதியுதவி வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சரணடைந்துள்ள மாவோயிஸ்ட் குழுவில் அவர்களது மூத்த தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் கன்கானலா ராஜி ரெட்டி (எ) வெங்கடேஷ் என்பவரும் இடம் பெற்றுள்ளார். முன்னதாக, மாவோயிஸ்ட் தளபதி பட்ஸே சுக்கா தலைமையின் கீழ் கடந்த 2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் சத்தீஸ்கர் மாநில முன்னாள் அமைச்சர் மஹேந்திர குமார் உள்ளிட்ட முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து, அவரைப் பிடிக்க ரூ.75 லட்சம் சன்மானம் அறிவித்து அரசுப் படைகள் தேடி வந்தது குறிப்பிடத்தக்கது.



சென்னையில் முதல்வரின் முகாம் அலுவலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை இயக்குநர் கே.பாக்யராஜ் தனது மனைவி பூர்ணிமாவுடன் சந்தித்து திரையுலகில் தான் 50 ஆண்டுகாலம் நிறைவு செய்ததையொட்டி கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுற்ற விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். அருகில் முதல்வரின் துணைவியார் உள்ளார்.

### தமிழ்நாடு போராடும் என அன்றே காட்டியவர்கள்:

# வேலுநாச்சியார், கட்டபொம்மன் பிறந்தநாளில் முதல்வர் புகழஞ்சலி

**சென்னை, ஜன. 04-**

தமிழ்நாடு போராடும் என அன்றே காட்டியவர்கள் வேலுநாச்சியார், கட்டபொம்மன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோரது பிறந்தநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதள பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் தெரிவித்திருப்பதாவது:- மிரட்டினால் அடங்கி விடுவோம் என எண்ணியோர்க்கு, 'தமிழ்நாடு போராடும்' என அன்றே காட்டிய வீரச்சுடர்கள்தாம் வீரமங்கை வேலுநாச்சியாரும், வீரபாண்டிய கட்டபொம்மனும். இந்திய நாட்டின் விடுதலைக்காக முன்னோடிகளாகப் போராடிய அவர்தம் பெருமையைத் தொடர்ந்து போற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு. அண்மையில் மதுரையில் திறக்கப்பட்ட மேம்பாலத்துக்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்டினோம், கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குத் திருவுருவச்சிலை அமைத்தோம். தமிழ்நிலத்தின் ஆளுமைகளைத் தரணியெங்கும் கொண்டு சேர்த்திடும் நம் பணி தொடரும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வீரமங்கை வேலு நாச்சியார் சிலைக்கு விஜய் மரியாதை



**சென்னை, ஜன. 04-**

வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு த.வெ.க. தலைவர் விஜய் மரியாதை செலுத்தினார்.

த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடி, தாய் மண்ணை மீட்ட முதல் இந்தியப் பெண் போராளி. சமூக சமய நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த எழுச்சிக் கனல்! எம் கொள்கைத் தலைவர், வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் கழகத்தின் தலைமை நிலையச் செயலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன்.

தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்த வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் வழியில், மக்கள் விரோத ஆட்சியாளர்களை விரட்டி, மக்கள் விரும்பும் மக்களாட்சியை அமைக்க உறுதியேற்போம் என தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை தொடர்பாக பொதுமக்களிடம் கருத்து கேட்க முடிவு

**சென்னை, ஜன. 04-**

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு ஆலோசனை மேற்கொண்டது. தேர்தல் அறிக்கை தொடர்பாக பொது மக்களிடம் கருத்து கேட்க குழு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.



தமிழ்நாட்டில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகவுள்ள நிலையில் கட்சிகள் தீவிரமாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பணியும் மும்முரமாக நடைபெறத் தொடங்கியுள்ளன. அந்த வகையில் அ.தி.மு.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு நேற்று அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் ஆலோசனை மேற்கொண்டது.

முன்னாள் அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், பொன்னையன், பொள்ளாச்சி ஜெயராமன், ஜெயக்குமார், சி.வி. சண்முகம், செம்மலை, வளர்மதி, ஆர்.பி. உதயகுமார் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர். தேர்தல் அறிக்கை தொடர்பாக மக்களிடம் குறிப்பாக விவசாயிகள், தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மாணவர்களிடையே கருத்து கேட்க குழு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புதுக்கோட்டை, தச்சங்குறிச்சியில் 2026 ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு

### அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்



**புதுக்கோட்டை, ஜன. 04-**

2026-ம் ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் நேற்று நடைபெற்றது. போட்டியை அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன் மற்றும் கலெக்டர் அருணா ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

தமிழர்களின் வீர விளையாட்டாகவும், பாரம்பரியம், கலாசாரத்தை போற்றும் வகையிலும் ஜல்லிக்கட்டு திகழ்கிறது. தமிழகத்தில் முதல் ஜல்லிக்கட்டு மற்றும் அதிக ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறும் இடம் என்ற பெருமையை புதுக்கோட்டை மாவட்டம் பெற்றுள்ளது. அதிக வாடிவாசல்களை கொண்டது மட்டுமல்லாமல், ஜல்லிக்கட்டு காளைகளும், காளையர்களும் அதிகமுள்ள மாவட்டமாகவும் திகழ்கிறது.

அந்த வகையில் இந்த ஆண்டின் (2026) முதல் ஜல்லிக்கட்டு புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் நேற்று நடைபெற்றது. தச்சங்குறிச்சி புனித விண்ணேற்பு அன்னை ஆலய திருவிழா மற்றும் புத்தாண்டையொட்டி விழாக்குழுவினர் சார்பில் நேற்று ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்பட்டது.

இந்த ஜல்லிக்கட்டில் 900 காளைகள் மற்றும் 300 மாடு பிடி வீரர்கள் பங்கேற்றனர். இதையொட்டி சுமார் 200-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் இந்த போட்டியை அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன் மற்றும் கலெக்டர் அருணா ஆகியோர் தொடங்கி வைத்தனர். புனித விண்ணேற்பு அன்னை ஆலய ஜல்லிக்கட்டு காளை முதல் காளையாக வாடிவாசலில் பாய்ந்தது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ள

# புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு 'ஜாக்டோ ஜியோ' வரவேற்பு

### கால வரையற்ற போராட்ட அறிவிப்பு வாபஸ்

**சென்னை, ஜன. 04-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு ஜாக்டோ ஜியோ வரவேற்பு தெரிவித்துள்ளது. மேலும் ஏற்கனவே அறிவித்திருந்த கால வரையற்ற போராட்டத்தை வாபஸ் பெறுவதாகவும் தெரிவித்துள்ளது.

புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிவித்தார். முதல்வரின் இந்த அறிவிப்பு அரசு ஊழியர்கள் சங்கங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன. சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து அவருக்கு இனிப்பு வழங்கி, அரசு ஊழியர்கள் நன்றி தெரிவித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த ஜாக்டோ ஜியோ அமைப்பினர், "23 ஆண்டு கால ஓய்வூதியம் இல்லாத நிலைமைக்கு நேற்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஓய்வூதிய திட்டத்தை நாங்கள் எதிர்பார்த்தது போன்று வழங்கிய மைக்கு முதல்-அமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றிகள். முதல்வரின் அறிவிப்பை ஜாக்டோ ஜியோ அமைப்பு பெருமகிழ்வோடு வரவேற்று நன்றி தெரிவிக்கிறது. நாங்கள் எதிர்பார்த்த ஓய்வூதிய திட்டம் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தனர். மேலும் ஜனவரி 6-ம் தேதி முதல் நடக்க இருந்த வேலை நிறுத்த போராட்டத்தை வாபஸ் பெறுவதாக ஜாக்டோ ஜியோ அறிவித்துள்ளது.

### த.வெ.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தையா?

# தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் விளக்கம்

**சென்னை, ஜன. 04-**

த.வெ.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தை குறித்து தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் விளக்கம் அளித்துள்ளார்.

சென்னையில் தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் பேசியதாவது;-

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேர்தல் தொகுதி பங்கீடு தொடர்பாக தி.மு.க. தலைமையுடன் காங்கிரஸ் தேலைமை பேச்சு நடத்தி வருகிறது. தி.மு.க. - காங்கிரஸ் கட்சிகள் இடையிலான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை அடுத்த கட்டத்திற்கு செல்ல உள்ளது. த.வெ.க.வுடன் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்தியது என்பது வதந்தி. தி.மு.க.வுடன் கூட்டணி இல்லை என காங்கிரசில் யார் கூறியது?

தி.மு.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவே குழு அமைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரை ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். கூட்டணி தொடர்பாக எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. கூட்டணி தொடர்பாக தி.மு.க.வுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# கூட்டணி குறித்து த.வெ.க.வுடன் காங்கிரஸ் பேச்சுவார்த்தையா..?

### செங்கோட்டையன் விளக்கம்

**ஈரோடு, ஜன. 04-**

விஜய் தான் தமிழகத்தின் முதல்வர் என ஏற்றுக்கொள்கிற கூட்டணிதான் த.வெ.க.வில் இணையும் என்று தெரிவித்துள்ள செங்கோட்டையன் கூட்டணி குறித்து த.வெ.க.வுடன் காங்கிரஸ் கட்சி பேச்சுவார்த்தை நடத்துவதாக வெளியான தகவல் தொடர்பாகவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

வேலுநாச்சியாரின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு கோபிசெட்டிப்பாளையம் அலுவலகத்தில் செங்கோட்டையன் அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதனை தொடர்ந்து அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது செங்கோட்டையனிடம் செய்தியாளர்கள் பல்வேறு கேள்விகள் எழுப்பினர். மேலும் த.வெ.க. - காங்கிரஸ் கூட்டணி அமைக்குமா? எனற கேள்வியும் எழுப்பப்பட்டது.

இந்த செய்தியாளர் சந்திப்பில் அவர்கூறியதாவது;-

அனைவரும் மாற்றம் வேண்டும் என்ற நோக்கத்தில் தான் பணியாற்றி வருகிறோம். தி.மு.க. வெற்றி பெறுவதற்காக பழைய ஓய்வுதிய திட்டத்தை நிறைவேற்றி தருவோம் என வாக்குறுதியில் குறிப்பிட்டிருந்தது. இன்று வரை நிறைவேற்றி தரவில்லை என்பதால் தான் போராட்டம் நடந்து வருகிறது.

த.வெ.க. உடன் கூட்டணிக்கு விருப்பம் தெரிவிப்பவர்கள் யாராக இருந்தாலும் தலைவர் தான் அதனை முடிவு செய்வார். எங்களை பொருத்தவரை விஜய் தான் தமிழகத்தின் முதல்வர் என ஏற்றுக்கொள்கிற கூட்டணி தான் த.வெ.க.வில் இணையும். அவர்களை வாழ்த்தி வரவேற்போம். த.வெ.க. - காங்கிரஸ் கூட்டணி குறித்து யார் வேண்டுமானாலும் கருத்துகளை சொல்லலாம். ஆனால் பேச்சு வார்த்தை என்பது தலைவர் இருக்கிறபோது அவருடன் கலந்து பேசுவது தான் பேச்சு வார்த்தையாக இருக்கும்.

அ.தி.மு.க. - தி.மு.க. இரு கட்சிகளையும் தாக்குவது த.வெ.க. தான். வெற்றி என்ற முடிவை த.வெ.க. அடைய போகிறது என்பதால் தான் இரு கட்சிகளும் த.வெ.க.வை தாக்குகிறது. எதிர்க்கட்சி ஆளும் கட்சியை தாக்குவதில்லை. ஆளும் கட்சியின் குறைபாடுகளை எதிர்க்கட்சி சொல்வதில்லை. எல்லாரும் த.வெ.க.வை தான் தாக்குகிறார்கள். மக்கள் ஏற்றிக்கொள்கிற தலைவர் விஜய் தான் என்ற முறையில் நம்மை தான் விமர்சனம் செய்கிறார்கள். மற்றவர்களை அல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

### மராட்டிய உள்ளாட்சி தேர்தல்:

# 66 இடங்களில் பா.ஜ.க., சிவசேனா கட்சியினர் போட்டியின்றி வெற்றி

**மும்பை, ஜன. 04-**

மராட்டிய உள்ளாட்சி தேர்தலில் 66 இடங்களில் பா.ஜ.க., சிவசேனாவை சேர்ந்தவர்கள் போட்டியின்றி வெற்றிப்பெற்றுள்ளனர்.

மும்பை உள்பட மராட்டியம் முழுவதும் உள்ள 29 மாநகராட்சிகளுக்கு வருகிற 15-ந்தேதி தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் கடந்த மாதம் 30-ந்தேதியுடன் முடிந்தது. வேட்பு மனுவை திரும்ப பெற நேற்று முன்தினம் கடைசி நாளாகும். நேற்று (சனிக்கிழமை) இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

இந்தநிலையில் பல்வேறு இடங்களில் பிரதான கட்சி வேட்பாளர்கள், குறிப்பாக ஆளும் கட்சி வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதில் மாநிலத்தை ஆளும் பா.ஜனதா, சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய மகாயுதி கூட்டணியை சேர்ந்தவர்கள் மட்டும் 66 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக பா.ஜனதா மூத்த தலைவர் கேசவ் உபாத்யே தெரிவித்தார்.

இதில் பா.ஜனதாவை சேர்ந்தவர்கள் மட்டும் 44 பேர் என்றும் அவர் கூறினார்.

கண் தானம் செய்வீர்

# இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்: மயிலாடுதுறை மீனவர்கள் 9 பேர் கைது



**சென்னை, ஜன. 04-**

இலங்கை கடற்படையால் மயிலாடுதுறை மீனவர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளது தமிழக மீனவர்கள் மத்தியில் மீண்டும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகம் மற்றும் புதுவையை சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும் மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இந்த நிலையில், மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது ரோந்து கப்பலில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர், விசைப்படகை சுற்றி வளைத்தனர். அதில் இருந்த 9 மீனவர்களை எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி சிறைபிடித்து கைது செய்ததுடன், 2 நாட்டுப்படகையும் பறிமுதல் செய்து காரைநகர் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

முதற்கட்ட விசாரணை முடித்து மீனவர்கள் 9 பேரும் படகுடன் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க இலங்கை கடற்படை திட்டமிட்டுள்ளது.

9 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தது அவர்களது குடும்பத்தினரையும், மீனவ மக்களையும் மிகுந்த சோகம் அடையச் செய்துள்ளது.

இலங்கை கடற்படை அத்துமீறி நடவடிக்கை எடுத்து 9 மீனவர்களை கைது செய்து இருப்பதாகவும், எனவே அவர்களை விடுவிக்க வேண்டும் என மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்து உள்ளன.

# ஏற்றுமதியாளர்கள் கடன் பெற ரூ.7 ஆயிரம் கோடியில் புதிய திட்டம்

**புதுடெல்லி, ஜன. 04-**

ஏற்றுமதியாளர்கள் கடன் பெறுவதை மேம்படுத்துவதற்காக ரூ.7,295 கோடி ஏற்றுமதி ஆதரவு தொகுப்பு திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் அஜய் படு கூறுகையில், "ஏற்றுமதியாளர்களின் நிதி சிக்கலுக்கு தீர்வு காண ஏற்றுமதி ஆதரவு தொகுப்பு திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. வட்டி மானிய திட்டத்தின் கீழ், ஏற்றுமதிக்கு முந்தைய, பிந்தைய கடன்களுக்கு மானியம் வழங்கப்படும். இதன்கீழ், தகுதியுள்ள சிறு, குறு, நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கு 2.75 சதவீத அளவுக்கு மத்திய அரசு மானிய பலன்கள் அளிக்கும்.

வட்டி மானியத்தின் அளவு, உள்நாட்டு, சர்வதேச அளவுகோல்கள் அடிப்படையில் ஆண்டுக்கு இருமுறை ஆய்வு செய்யப்படும். ஒரு நிறுவனத்துக்கு ஓராண்டு பலன் ரூ.50 லட்சம் என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிடும்.

ரூ.2 ஆயிரத்து 114 கோடி பிணைய ஆதரவு திட்டத்தின்படி, ஒரு சிறு, குறு, நடுத்தர நிறுவனத்துக்கு ரூ.10 கோடி வரை பிணை உத்தரவாதம் அளிக்கப்படும். சிறு, குறு ஏற்றுமதியாளர்களுக்கு 85 சதவீதம் வரையும், நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கு 65 சதவீதம் வரையும் பிணை உத்தரவாதம் அளிக்கப்படும்" என்று அவர் கூறினார். இதன்படி ஏற்றுமதியாளர்கள் கடன் பெறுவதை மேம்படுத்துவதற்காக ரூ.7 ஆயிரத்து 295 கோடி ஏற்றுமதி ஆதரவு தொகுப்பு திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இதில், வட்டி மானியத்துக்கு ரூ.5 ஆயிரத்து 181 கோடியும், பிணை ஆதரவாக ரூ.2 ஆயிரத்து 114 கோடியும் செலவிடப்படும். இந்த திட்டம் 6 ஆண்டுகளுக்கு செயல்பாட்டில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தொகுதி பங்கீடு தொடர்பாக தி.மு.க.வுடன் பேச்சுவார்த்தை நடக்கிறது. தி.மு.க. தலைவர்கள், அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். அதன் பின்னர் எங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள். விரைவில் அடுத்த கட்ட பேச்சு வார்த்தை நடைபெறும்.

- செல்வப்பெருந்தகை



மத்திய பா.ஜ.க. அரசு தமிழகத்திற்கு உரிய நிதிப்பங்கீட்டை வழங்காமல் வஞ்சித்து வருகின்ற போதிலும், அரசுக்கு கடும் நிதிச்சுமை உள்ள நிலையிலும் பயன் வரையறுக்கப்பட்ட, பணிக்கொடை, அகவிலைப்படி, குடும்ப ஓய்வூதியம் உள்ளிட்ட உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதை வரவேற்கிறோம்.

- சண்முகம்



எம்.ஜி.ஆர். எந்த நோக்கத்துக்காக அ.தி.மு.க. இயக்கத்தைத் உருவாக்கினார்களோ, யாராலும் வெல்ல முடியாத இயக்கமாக ஜெயலலிதா வளர்த்தெடுத்தார்களோ - அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால், அ.தி.மு.க.வில் பிரிந்து கிடக்கின்ற அனைவரும் ஒன்றுசேர வேண்டும். பிரிந்து கிடந்தால் தமிழகத்தில் மீண்டும் ஆட்சி அமைய வாய்ப்பில்லை.

- ஓ.பன்னீர்செல்வம்



காங்கிரஸ், பா.ஜ.க., தி.மு.க., அ.தி.மு.க.விற்கு எந்த கோட்பாடு மாற்றமும் கிடையாது. தி.மு.க.விற்கு மாற்று அ.தி.மு.க. என கூறுவது வெறும் வார்த்தையில்தான், கொள்கையில் எந்த மாற்றமும் கிடையாது. ஆயிரம் அமித்ஷாக்கள் வந்தாலும் எந்த மாற்றமும் இருக்காது. கூட்டணி உள்ளிட்டவற்றால் ஆட்சி மாறும் ஆனால் ஆட்சி முறை மாறாது.

- சீமான்

# திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் வெள்ளித்தேர் வெள்ளோட்டம்:சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்

**சென்னை,ஜன.04**

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.பி.கே.சேகர்பாபு ஆகியோர் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் புதியதாக உருவாக்கப்பட்ட வெள்ளித் தேரின் வெள்ளோட்டத்தை தொடங்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து சீரமைக்கப்பட்ட திருக்கோயிலின் கிழக்கு வாசல் மண்டபம் மற்றும் கருமாரி உருமாறி தெப்பக்குளம் ஆகியவற்றை பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். மேலும், ரூ. 1.60 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் பிரகாரங்களை ஒளி வெள்ளத்தில் பிரகாசிக்க வைத்திடும் வகையிலான பணிகளையும் தொடங்கி வைத்தனர்.

பின்னர், அமைச்சர்பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, கடந்த ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் அவர்களின் மறதியால், விருப்பமின்மையால் செய்யாமல் விட்டுச் சென்ற திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் நேர்த்திகடனை செலுத்திடும் வகையிலும், அவர்களது அடிப்படை வசதிகளை நிறைவேற்றிடும் வகையிலுமான பணிகள், நம் முன்னோர்கள் அளித்து சென்ற பொக்கிஷங்களான ஆயிரமாண்டு பழமையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாக்கும் பணிகள், திருக்குளங்கள், தெப்பங்குளங்கள், திருத்தேர்களை சீரமைக்கும் பணிகள், திருத்தேர் கொட்டகைகள், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்ய வேண்டிய குடமுழுக்குகள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், முடிகாணிக்கை மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் போன்ற கட்டுமானப் பணிகளை இந்த அரசு பொறுப்பேற்ற பின் முதலமைச்சர் அவர்கள் பார்த்து, பார்த்து செய்ததன் காரணமாக 3,956 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு வரலாற்று நிகழ்வாக அமைந்திருக்கிறது.

இந்த அரசு வந்த பிறகு தான் பெருந்திட்ட வரைவின் கீழ், 19 திருக்கோயில்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக வடமாநிலங்களில்தான் இதுபோன்ற பணிகளை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் திருச்செந்தூரில் சுமார் ரூ. 400 கோடி செலவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடினாலும் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தந்ததோடு, இறை பசியோடு வருகை தரும் பக்தர்களின் வயிற்று பசியையும் போக்கிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாகும். திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலுக்கு முதன்முதலில் நாங்கள் வருகை தந்த போது கிழக்கு வாசல் மண்டபம் சரிந்திருந்த நிலையையும், தெப்பக்குளம் கழிவு நீரால் சூழ்ந்திருந்த நிலையையும், 1008 கால் மண்டபம் பூட்டப்பட்டிருந்த நிலையையும் கண்டோம். அதன் பிறகு முழுமையாக ஆய்வு செய்து 1000 கால் மண்டபத்தினை 18 ஆண்டுகளுக்கு பிறகு பக்தர்கள் பயன்பாட்டிற்கு திறந்த வைத்தோம்

. சீர்குலைந்திருந்த கிழக்கு வாசல் மண்டபம் மற்றும் தெப்பக்குளம் சீரமைக்கும் பணிகளை டிவிஎஸ் நிறுவனத்தின் மூலம் முழுவதுமாக மேற்கொண்டு இன்றைய தினம் பயன்பாட்டிற்கு திறந்து வைத்துள்ளோம். அதே போல் திருக்கோயில் பிரகாரங்களை ரூ. 1.60 கோடி மதிப்பீட்டில் ஒளி வெள்ளத்தில் பிரகாசிக்கும் வகையிலான பணிகளையும் தொடங்கி வைத்தோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு மக்கள் நலத் திட்டங்களை வழங்கிட நெல்லைக்கு வருகை தந்தபோது, இந்த திருக்கோயிலின் திருதேரின் நிலையை அறிந்து, ஓராண்டுக்குள் புதிய திருத்தேர் வீதியுலா வரும் என அறிவித்திருந்தார். அது குறித்து ஆய்வு செய்தபோது 1991 ஆம் ஆண்டில் அந்த தேர் தீவிபத்தினால் உருகுலைந்ததை அறிந்தோம். அதனைத் தொடர்ந்து பழனி திருகோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர், சென்னை சரவணா ஸ்டோர்ஸ் உரிமையாளர் மற்றும் உபயதாரர்களை அழைத்து பேசி 400 கிலோ வெள்ளியை உபயமாக பெற்று இந்த வெள்ளித் தேரை உருவாக்கினோம். கடந்த வாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெல்லையில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டபோது ஜனவரி முதல் வாரத்தில் புதிய வெள்ளித் தேர் உலா வரும் என்றார். சொன்னதை செய்கின்ற அரசு இந்த அரசு என்பதற்கு வெள்ளித் தேர் வெள்ளோட்டமே சாட்சியாகும். இப்படி பற்பல சாதனைகளை புரிந்து இந்த அரசு ஆன்மிகத்திற்கு எதிரானது என்ற பிம்பத்தை உருவாக்க நினைத்தவர்கள் நிலைகுலைந்து போய் உள்ளனர். எப்படியாவது இனத்தால், மதத்தால், மொழியால் மக்களை பிளவுபடுத்தலாம் என்ற நினைத்த சக்திகளின் கனவு ஒருபோது தமிழகத்தில் எடுபடாது. இந்த ஆன்மிக பணிகளுக்காகவே எல்லா இறைவன்களும் எங்கள் முதலமைச்சரோடு கைகோர்த்து கூட்டணி அமைத்து 2026லும் இரண்டாவது முறையாக அரியணையில் அமர வைப்பார்கள்.



வனவிலங்குகள் பாதுகாப்பு சட்டப்படி, உரிய அனுமதிகளை பெற்று நெல்லையப்பர் திருக்கோயிலுக்கு புதிய யானை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதற்கெடுத்தாலும் சிலர் வழக்குகளை போட்டு முடக்க நினைக்கின்றனர். அவை அனைத்தையும் முறியடித்து வெற்றி பெறுவோம். தெய்வத்திற்கு நிகராக போற்றப்படும் யானையை இந்த திருக்கோயிலுக்கு கொண்டு வருவதற்கு துறையும், அரசும் மேற்கொள்ளும். உத்திரகாண்ட் மாநில உபயதாரர் யானை தருவதற்கு முன்வந்துள்ளார். திருநெல்வேலியில் புதிய இணை ஆணையர் அலுவலகக் கட்டடம், மூத்த குடிமக்கள் இல்லம், உண்டு உறைவிடப் பள்ளி மாணவர்களுக்காக கருணை இல்லம் போன்றவற்றை உருவாக்கி தந்துள்ளோம். பக்தர்களுக்கான அனைத்து வசதிகளும் தொடர்ந்து நிறைவேற்றி தரப்படும்.

சாலை மட்டத்திலிருந்து தாழ்வாக உள்ள 25 திருக்கோயில்களை உயர்த்தும் (லிப்டிங்) பணிகள் நடைபெற்று வந்த நிலையில் அதில் வரும் 4000-வது குடமுழுக்காக பிப்ரவரி 8 ஆம் தேதி குடமுழுக்கு நடைபெற உள்ள வியாசர்பாடி இரவீஸ்வரர் திருகோயிலையும் சேர்த்து இதுவரை 15 திருகோயில்களை உயர்த்தும் பணிகள் நிறைவுற்றுள்ளன. இதர 10 திருக்கோயில்களில் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இறைவனையும் லிப்டிங் செய்கின்ற பணிகளை திராவிட மாடல் ஆட்சி மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் வைத்திருந்த கோரிக்கையான பனகுடி திருக்கோயில் திருப்பணி விரைவில் மேற்கொள்ளப்படும்,

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் இரா. சுகுமார், சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் கோ. இராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையர் மருத்துவர் மோனிகா ராணா,முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இராஆவுடையப்பன், துணை மேயர் கே.ஆர். ராஜு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன், இந்து சமய அறநிலையத்துறை தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, மண்டல இணை ஆணையர்கள் கவிதா பிரியதர்ஷினி, ஏ. ஜான்சிராணி, துறை கலந்து கொண்டனர்.




**திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் 2வது வட்டம்4 பாகம் 117,54ல்வட்டசெயலாளர்கள் டி.சேகர், க.பவுல் தலைமையில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றிவாக்குசாவடி பாக அளவிலான கூட்டம்நடைபெற்றது. கூட்டத்தில் பகுதி வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

## மணலி மண்டல இளைஞர்களுக்கு உதயநிதி ஸ்டாலின் வழங்கிய விளையாட்டு உபகரணங்கள்: தலைவர் ஆறுமுகம் வழங்கினார்



**திருவொற்றியூர் ஜன.04**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின்தனது துறையான விளையாட்டு துறை சார்பில் சென்னையில் உள்ள 200 வார்டுகளில் உள்ள இளைஞர்களுக்கு தமிழர் திருநாளான பொங்கல் திருநாளில் விளையாட விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

அதேபோல் சென்னை மாநகராட்சி மணலி மண்டலத்தில் உள்ள8வார்டுகளில் உள்ள திமுக அதிமுக காங்கிரஸ் கவுன்சிலர்கள் மாத்தூர்காசிநாதன் மணலி புதுநகர் நந்தினி சண்முகம் ராஜேந்திரன் காங்கிரஸ் கவுன்சிலர் தீர்த்தி அருணாசலம் அதிமுக கவுன்சிலர்கள்

எம்.ஸ்ரீதரன் ஜெய்சங்கர் டாக்டர் ஆர்.ஜி.ராஜேஷ் சேகர்ஆகியோரிடம் விளையாட்டு உபகரணங்களான சிலம்ப கோல் சிறுவர் பெரியவர் கிரிக்கெட் மட்டை தோல்பை தொப்பி கேரம் போர்டு மற்றும் உபகரண பொருட்களை மண்டல குழு தலைவர் ஏ.வி. ஆறுமுகம் வழங்கினார். அவருடன் மாநகராட்சி துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.




**மதுரவாயல் தெற்குப் பகுதி, 155 வது வார்டு ராமாபுரத்தில் வட்ட செயலாளர் ஆ.செல்வம் ஏற்பாட்டில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி செயல் திட்ட பரப்புரை குறித்து பி.வில்சன் எம்.பி. காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியனர். உடன் மாமன்ற உறுப்பினர்கள் ராமாபுரம் வ.செல்வகுமார், கே.ராஜி, மாவட்ட பிரதிநிதிகள் எம்.எல்.நாதன், ஜி.ராமகிருஷ்ணன், மற்றும் பலர் உள்ளனர்.**

## கோயம்பேடு பகுதியில் நகைகள் மற்றும் பணத்தை திருடிய கொள்ளையன் கைது

**சென்னை ஜன 04-**

சென்னை, அரும்பாக்கம், ஜெகன்நாதன் நகர் பகுதியில் விமலா, என்பவர் கணவர் மற்றும் மகனுடன் வசித்து வருகிறார்.

இவரது கணவர் இரயில்வேயில் பணிபுரிந்து வருகிறார். கடந்த 09.10.2025 அன்று விமலா குடும்பத்தினர் இரவு வீட்டின் முன் கதவை பூட்டாமல் சாத்தி வைத்து விட்டு படுக்கையறைக்கு சென்று தூங்கியுள்ளனர். மறுநாள் அதிகாலை விமலா எழுந்து பக்கத்து அறைக்கு சென்று பார்த்த போது, அடையாளம் தெரியாத நபர் கதவை திறந்து வீட்டிற்குள் நுழைந்து கைப்பையிலிருந்த சுமார் 3 சவரன் தங்கச்செயின், வெள்ளி நகைகள், நவரத்தின மோதிரம் மற்றும் பணம் ரூ.80,ஆயிரம் திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து விமலா கோயம்பேடு சி.எம்.பி.டி காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கோயம்பேடு சி.எம்.பி.டி காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி முத்துகிருஷ்ணன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 நவரத்தின மோதிரம் மற்றும் பணம் ரூ.10,000/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி முத்துகிருஷ்ணன் மீது ஏற்கனவே 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி முத்துகிருஷ்ணன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

## வியாசர்பாடி பகுதியில் செல்போன் பறிப்பு: இருவர் கைது

**சென்னை ஜன 04-**

சென்னை, புளியந்தோப்பு பகுதியில் வசித்து வரும் கலைவாணன், என்பவர் தனியார் மதுபாரில் வேலை செய்து வருவதாகவும், கலைவாணன் நேற்று முன் தினம் மதியம், சைக்கிளில் வியாசர்பாடி, கணேசபுரம் சந்திப்பு அருகே சென்று கொண்டிருந்தபோது, அவ்வழியே இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் கலைவாணன் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

**விசாரணை**

இது குறித்து கலைவாணன் வியாசர்பாடி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். வியாசர்பாடி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் பறிப்பில் ஈடுபட்ட எதிரிகள் 1.ராஜேஷ், 2.ரகுமான், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து, புகார்தாரரின் செல்போன் உட்பட 2 செல்போன்கள் மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி ராஜேஷ் மீது 4 குற்ற வழக்குகள் உள்ளதும், ரகுமான் மீது 8 குற்ற வழக்குகள் உள்ளதும் இவர் மதுரவாயல் காவல் நிலைய சரித்திரபதிவேடு குற்றவாளி என்பதும் தெரியவந்தது. எதிரிகள் இருவரும் இதே போல வேறொரு நபரிடம் செல்போனை பறித்துக் கொண்டு தப்பியது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக் குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

## புளியந்தோப்பு பகுதியில் இருவர் மீது கத்தி முனையில் கொலை மிரட்டல்: ஒருவர் கைது

**சென்னை டிச 04-**

சென்னை, புளியந்தோப்பு பகுதியில் வசித்து வரும் 18 வயது பெண் கல்லூரி படித்து வருவதாகவும், இவரது தம்பிக்கும் அவரது நண்பர் கோகுல்ராஜ் என்பவருக்கும் அடிக்கடி நட்பு முறையில் சண்டை ஏற்படுவதாகவும், இந்நிலையில், நேற்று முன் தினம் மதியம் மேற்படி பெண் அவரது வீட்டிலிருந்தபோது, கோகுல்ராஜ் கோபமாக அவரது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, எங்கே உன் தம்பி எனகேட்டு அப்பெண்ணின் தம்பியை கையால் தாக்கி, தடுக்க சென்ற அப்பெண்ணையும் தாக்கி கீழே தள்ளிவிட்டு தகாத வார்த்தைகளால் பேசியதாகவும், பின்னர் பொதுமக்கள் வருவதைக் கண்டு கோகுல்ராஜ் தான் மறைத்து வைத்திருந்த கத்தியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும், பாதிக்கப்பட்ட பெண் புளியந்தோப்பு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்புச்சட்டம் மற்றும் ஆயுத சட்டம்

ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். புளியந்தோப்பு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி கோகுல்ராஜ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி கோகுல்ராஜ் மீது ஏற்கனவே 1 குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி கோகுல்ராஜ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

## பாரிமுனை பகுதியில் கத்திமுனையில் 12ஐபோன்கள் பறித்த வழக்கில் இருவர் கைது

**சென்னை ஜன 04-**

சென்னை, எம்.கே.பி. நகரைச் சேர்ந்த தௌபீக் அப்துல்லா, என்பவர் பாரிமுனை ஈவ்னிங் பஜாரில் உள்ள அவரது அக்கா கணவரின் கடையில் வேலை செய்து வருவதாகவும், தௌபீக் அப்துல்லா கடந்த 29. ந் தேதி அன்று இரவு மேற்படி கடையிலிருந்து 12 ஐபோன்கள் அடங்கிய பையை பார்சல் செய்வதற்காக இருசக்கர வாகனத்தில் எடுத்துக் கொண்டு, பாரிமுனை, மூர் தெரு மற்றும் மூக்கர் நல்லமுத்து தெரு சந்திப்பு அருகே செல்லும்போது, அவரை பின் தொடர்ந்து இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் தௌபீக் அப்துல்லா வாகனத்தில் வைத்திருந்த ஐபோன்கள் அடங்கிய பையை எடுத்த போது, தௌபீக் தடுத்ததாகவும், உடனே இருவரும் தௌபீக்கை மிரட்டி அவர் வைத்திருந்த ஐபோன்கள் அடங்கிய பையை பறித்துக் கொண்டு தங்களது இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றுவிட்டதாகவும், மேற்படி நபர்களை கண்டுபிடித்து ஐபோன்களை மீட்டு தரும்படியும் தௌபீக் அப்துல்லா வடக்கு கடற்கரை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

வடக்கு கடற்கரை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.சூர்யா, 2.சந்தோஷ், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2 ஐபோன்கள் மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் மற்றும் 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.மேலும். இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர். அடைக்கப்பட்டனர்.மேலும். இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

## புளியந்தோப்பு பகுதியில் பெண்ணை தாக்கியவர் கைது

**சென்னை ஜன 04-**

சென்னை, புளியந்தோப்பு, பொன்னப்பன் தெருவில் வசித்து வரும், அலமேலு என்பவர் அதே பகுதியில் உள்ள அங்காளபரமேஸ்வரி கோவிலில் பராமரிப்பு பணி செய்து வருவதாகவும், இவர் கடந்த 1.ந் தேதி அன்று மாலை, கோவிலில் இருந்த போது அதே தெருவில் வசிக்கும் பாலாஜி என்பவர் மது போதையில் கோவிலின் உள்ளே நுழைந்து கோவில் சூலத்தை சேதபடுத்தியதாகவும், இதனைக்கண்ட அலுமேலு பாலாஜியை தடுக்க சென்றபோது, பாலாஜி அலமேலுவை தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், பாதிக்கப்பட்ட அலமேலு, பேசின்பாலம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். பேசின்பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் தொடர்புடைய எதிரி பாலாஜி, என்பவரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட எதிரி பாலாஜி விசாரணைக்குப் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

## அண்ணாசாலை பகுதியில் தம்பி மண்டை உடைப்பு: அண்ணன் கைது

**சென்னை ஜன 04-**

சென்னை, அண்ணா சாலை, பார்டர் தோட்டம் பகுதியில் வசித்து வரும் கார்த்திக், என்பவர் பால் கறக்கும் வேலை செய்து வருவதாகவும், இவருக்கும் இவரது அண்ணன் பாலாஜி என்பவருக்கும் அடிக்கடி வாய் தகராறு ஏற்படுவதாகவும், இந்நிலையில், நேற்று முன் தினம் விடியற்காலை, கார்த்திக் வீட்டில் இருந்த போது அவரது அண்ணன் பாலாஜி, அம்மாவிடம் செலவுக்கு பணம் வேண்டும் என கேட்டு தொந்தரவு செய்து கொண்டிருந்ததை கண்டு கார்த்திக் ஏன் அம்மாவை தொந்தரவு செய்கிறாய் என பாலாஜியிடம் கேட்டதாகவும், உடனே பாலாஜி தகாத வார்த்தையால் பேசி, கீழே இருந்த பீர் பாட்டிலை எடுத்து கார்த்திக்கின் காது அருகே தாக்கிவிட்டு, கொலைமிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும், தாக்குதலில் இரத்தக்காயமடைந்த கார்த்திக், ஆட்டோ மூலம் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வருவதாகவும், மருத்துவமனையிலிருந்து கார்த்திக் கொடுத்த புகாரின்பேரில், அண்ணா சாலை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அண்ணாசாலை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட பாலாஜி, என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி பாலாஜி விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

## ஓட்டேரி பகுதியில் மளிகைக்கடை பூட்டை உடைத்து பணம் திருடிய 3பேர் கைது

**சென்னை 04-**

சென்னை, ஓட்டேரி, மங்களபுரத்தைச் சேர்ந்த சுகுமார், என்பவர் ஓட்டேரி, சி.ஒய்.எஸ்.சாலையில் மளிகைக்கடை நடத்தி வருவதாகவும், சுகுமார் வழக்கம்போல கடந்த 30.ந் தேதி அன்று இரவு அவரது மளிகைக்கடையை பூட்டிவிட்டு மறுநாள் காலை மளிகைக் கடையை திறக்க வந்தபோது, மளிகைக் கடையின் ஷட்டர் பூட்டு உடைக்கப்பட்டு, கடையின் கல்லாவில் வைத்திருந்த பணம் ரூ.5,500ஐ திருடு போயுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட சுகுமார் என்பவர் ஓட்டேரி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். ஓட்டேரி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டில் ஈடுபட்ட பெரம்பூர், சேமாத்தம்மன் புதிய காலனி, மெயின் தெருவைச் சேர்ந்த எதிரிகள் ஆறுமுகம், ஹரிஷ்குமார், மற்றும் சந்தோஷ், ஆகிய மூவரை போலிசார் கைது செய்தனர்.

## கொலை முயற்சி வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் கைது

**சென்னை ஜன 04-**

சென்னையில் கடந்த 2022ம் ஆண்டு, எம்.கே.பி.நகர் காவல் நிலையத்தில் தாக்கலான குணசேகர் என்பவரை கொலைமுயற்சி செய்த வழக்கில் தொடர்புடைய எதிரி அருண்பாண்டியன் (எ) அருண் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்று, சென்னை, சிங்காரவேலர் மாளிகையிலுள்ள 17வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி அருண்பாண்டியன் (எ) அருண் என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த வருடம் பிப் 14. ந் தேதி அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.எம்.கே.பி.நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி அருண்பாண்டியன் (எ) அருண், என்பவரை கைது செய்தனர்.

# அகில இந்திய விஸ்வகர்ம பேரவை சார்பில் முப்பெரும் விழா



அரக்கோணம் ஜன 4

அகில இந்திய விஸ்வகர்ம பேரவையின் அரக்கோணம்நகர கிளை சார்பாக2026 நாள்காட்டி வெளியீடு கூடுதலாக ,நகர நிர்வாகிகள் பதவி ஏற்பு மற்றும்புத்தாண்டை வரவேற்கும் விதமாக கேக் வெட்டும் விழா எனமுப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டதுஇந்த, விழாவிற்கு கவுரவத் தலைவர் பாலாச்சாரி,தலைமை தாங்கினார் அவைத் தலைவர் கஜேந்திரன் ஆச்சாரி, செயல் தலைவர் மூர்த்தியாச்சாரி, நகரத் தலைவர் லட்சுமணன் ஆச்சாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர் நகரச் செயலாளர் ஜெகதீஷ் ஆச்சாரி கேக் வெட்டினார் பொதுச் செயலாளர் .மருதராஜ கணேசன் வேலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டில்லி ஆறுமுகம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 2026 நாள்காட்டி வெளியிட்டனர் இணைத் தலைவர் பழனி ஆச்சாரி துணைத் தலைவர் பார்த்திபன் ஆச்சாரி இணைச் செயலாளர் கார்த்திக் , துணைச் செயலாளர் ஆர் ராம்குமார் எம் சபரிநாதன் டி சுகுமார் ஏ சரவணன் மூத்த ஆலோசகர் கே சரவணகுமார், நீலகண்டன் ஆர் குமார் ஆகியோருடன் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர், நிகழ்ச்சி முடிவில் அனைவருக்கும் வாழ்த்துக்களும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது.




வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பொகலூர் ஊராட்சியில் ரூ.59லட்சத்து59ஆயிரம்மதிப்பில்அமைக்கப்பட்டுள்ளதார்சாலையைமாவட்டகண்காணிப்பு அலுவலர் ச.உமா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் திட்ட இயக்குனர் காஞ்சனா, ஆதம் குழு தலைவர் ஜனார்த்தனன் கலந்து கொண்டனர்.



ராணிப்பேட்டைமாவட்டதேர்தல்அலுவலர்சந்திரகலாஅரக்கோணம்நகராட்சிஅலுவலகத்தில் வாக்காளர் தீவிர திருத்தத்தின் ஒருபகுதியாக புதிய வாக்காளர் சேர்க்கும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் வாக்காளர் பதிவு அலுவலர் ரமேஷ், வட்டாட்சியர் வெங்கடேசன், நகராட்சி ஆணையர் ஆனந்தன் கலந்து கொண்டனர்.

# ஆன்மீக பணியோடு கல்வி கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் பணியும் செய்கிறார்கள்: வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ சக்தி அம்மாவின் 50வது ஜெயந்தி விழாவில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பேச்சு



வேலூர்,ஜன. 4

வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ சக்தி அம்மாவின் 50வது ஜெயந்தி விழா பொற்கோவில் வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய இணை அமைச்சர் எல். முருகன், புதிய நீதி கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், பொற்கோவில் இயக்குனர் சுரேஷ்பாபு, நாராயணி மருத்துவபனை இயக்குநர் டாக்டர் என்.பாலாஜி மேலாளர் சம்பத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசுகையில்


ஸ்ரீபுரம் சக்தி அம்மாவின் பொன்விழாவில் உங்களோடு நானும் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.இன்று நான் அம்மாவின் ஸ்ரீபுரத்திற்கு வருவது முதல் முறை அல்ல பலமுறை வந்திருக்கிறேன்.

ஏறத்தாழ 2000-ம் ஆண்டில் இருந்து 25 ஆண்டு காலமாக எப்போதெல்லாம் நான் வேலூருக்கு வருகிறேனோ, அப்போதெல்லாம் அம்மாவை சந்திக்கின்ற பாக்கியமும் அம்மாவினுடைய ஆசீர்வாதத்தைப் பெறுகின்ற பாக்கியமும் எனக்குத் தொடர்ந்து கிடைத்து வருகிறது.

இந்த ஸ்ரீபுரம் பொற்கோவிலில் யாரெல்லாம் , அம்மனையும் தரிசித்திருக்கிறார்கள் என்று பார்த்தால் முன்னாள் குடியரசுத் தலைவர்கள் ஏபிஜெ.அப்துல் கலாம், ராம்நாத் கோவிந்த், கடந்த மாதம் தற்போதைய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வருகை தந்தது சிறப்பித்தார்

மாதங்களில் நான் மார்கழி என்று பகவத் கீதையில் கண்ணன் கூறியது போல, புண்ணியங்கள் நிறைந்த இந்த மார்கழி மாதம், ஜனவரி 3, 1976-ல் இந்த வேலூர் மாநகரில் ஸ்ரீ சக்தி அம்மா பிறந்தார்கள். சிறு வயது முதலே பூஜை, ஆலய வழிபாடுகளில் ஆர்வம் காட்டிய அம்மா, தனது 16-வது வயதில் திருமலைக்கோடி என்னும் இந்த புண்ணிய பூமியில் நாராயணி பீடத்தை உருவாக்கினார்கள். மேலும் அம்மாவோடு பேசிக் கொண்டிருந்தபோது தான் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், இந்த இடத்தில் அம்மன் சுயம்புவாக வரப்போகிறாள் என்று. அது எந்த இடத்தில் வரும் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் அம்மா சுயம்பாகத் தோன்றியதை எனக்கு விவரித்தார்கள். இதிலிருந்து தெரிவது என்னவென்றால், இறை சக்திக்கு மீறிய சக்தி உலகில் ஒன்றுமில்லை என்பதுதான் இந்த நாராயணி பீடம் ஆன்மிக பணியோடு கல்வி கற்கும் மாணவர்களுக்கு உதவி, ஆலயங்கள் புனரமைத்தல், பசுமை உருவாக்கும் திட்டம் என எல்லா பணிகளையும் செய்கிறார்கள். மேலும் பக்தியுடன் தர்ம நெறிகளையும் மக்களுக்கு வழங்குகிறார். எப்படி வந்தாலும் தர்மத்தை ஒட்டிய வாழ்வே உன்னுடையதாக இருக்க வேண்டும் என்று ஆசீர்வதிப்பவர் தான் சக்தி அம்மா.பாரதி சொன்னது போல் அன்பில் சிறந்த தவமில்லை' என்றான். அப்படி பிறர்பால் அன்பாக இருப்பதும், பிறருடைய மனம் நோகாமல் நடந்து கொள்வதும், சில பேர் நம்முடைய மனம் நோகும்படி நடந்து கொண்டாலும்கூட, அதை உடனே மறந்து அவர்களை அரவணைப்பது தான் உயர்ந்த சிந்தனையாகும் என்பது நம்முடைய நாராயணி அம்மாவின் அருள்வாக்காகும்.இவ்வாறு அனைவரிடமும் அன்பு செழிக்க அன்பே சிவம் என்ற உலகத்திற்குப் பறைசாற்றும் ஆன்மீகச் சித்தராய் அறம் வளர்க்கும் செல்வனாகிய சக்தி அம்மா அருளாசி வழங்குவதை பெருந்தவமாய் நான் கருதுகிறேன்.

அந்த வகையிலே அம்மாவினுடைய ஆசி இருக்கிறபொழுது ஒரு மகத்தான சமூகத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு என் உரையை நிறைவு செய்கிறேன் என்று பேசினார். நிறைவாக சக்தி அம்மா குடியரசு துணைத்தலைவர் சி.பி. ராதா கி ரு ஷ் ண னு க்கு கோமாதா சிலை மற்றும் தங்க கோவில் வடிவங்களை நினைவு பரிசாக வழங்கினார்.



வேலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனை தமிழக அரசின் சார்பில் அமைச்சர் மா.மதிவேந்தன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.



வேலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்த துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனை கலெக்டர் வே.இரா.சுப்புலட்சுமி பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

## திருவண்ணாமலை அருகே வரும் 9ந்தேதி நடைபெறும்

# தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணத்தில் 5ஆயிரம் மகளிர் பங்கேற்க பாமக மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்



திருவண்ணாமலை ஜன.4-

திருவண்ணாமலை ஏந்தல் பைபாஸ் சாலையில் ஒரு தனியார் ஓட்டலில் தி.மலை தெற்கு மாவட்ட பாமக செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஏந்தல் பெ.பக்தவச்சலம் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு மாநில இளைஞரணி தலைவர் அ.கணேஷ்குமார் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் வருகிற 9ந்தேதி திருவண்ணாமலை அருகே உள்ள கீழ்பாலானந்தல் கூட்ரோடு மங்கலத்தில் ஒரு தனியார் திருமண மகாலில் பசுமை தாயகம் தலைவர் சௌமியா அன்புமணி தலைமையில் தமிழக மகளிர் உரிமை மீட்பு பயணம் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதில் 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் பங்கேற்க செய்வதெனவும் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் கூட்டணி கட்சி சார்பில் பாமக போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் தோழமை கட்சி வேட்பாளர்களையும் வெற்றிபெற செய்ய களப்பணியாற்றிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த கூட்டத்தில் மாநில துணை தலைவர் எம்.காமராஜ் மேற்கு மாவட்ட செயலாளர் இல.பாண்டியன் மாநில இளைஞர் சங்க செயலாளர் அ.வே.பிரசாத் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ப.குமரேசன் ப.செந்தில்குமார் ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் பி.பழனிவேல் மாவட்ட தலைவர் ஈ.க.ஏழுமலை மாவட்டஅமைப்பு செயலாளர் கே.ஆர்.முருகன் மாநில மகளிரணி நிர்வாகி கஸ்தூரி வன்னியர் சங்க மாவட்டசெயலாளர் க.நாராயணசாமி மாவட்ட தலைவர் மு.பெரியசாமி உழவர் பேரியக்க மாவட்ட செயலாளர் சிவக்குமார் மாவட்ட தலைவர் வேடந்தவாடி ஆறுமுகம் உள்பட மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் அணி நிர்வாகிகள்கலந்துகொண்டனர். முடிவில் மாநகர செயலாளர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

# மார்கழி ஆருத்ரா தரிசனம்: மடவாளம் அங்கநாதர் ஆலயத்தில் ஆனந்த நடராஜருக்கு சிறப்பு பூஜை

திருப்பத்தூர் ஜன.4-

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அடுத்த மடவாளம் பகுதியில் பழமையும் புகழும் பெற்ற நலம் பெரு ஸ்ரீ அங்கநாதர் ஈஸ்வரர் திருக்கோயிலில் மார்கழி மாத ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு, சிவகாமி சுந்தரி சமேத ஆனந்த நடராஜ பெருமானுக்கு சிறப்பு பூஜைகள் விமரிசையாக நடைபெற்றன

ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு, அதிகாலை விடியற்காலை 3 மணி அளவில் யாக பூஜைகள் மற்றும் யாக விஜயம் நடைபெற்றது. தொடர்ந்து 4 மணி அளவில் நடராஜ பெருமானுக்கும் சிவகாமி அம்மையாருக்கும் வாசனை திரவங்கள், பால், தயிர், தேன், இளநீர் உள்ளிட்ட திரவங்களால் சிறப்பான அபிஷேகங்கள் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, காலை 6 மணி அளவில் சிவகாமி சுந்தரி சமேத ஆனந்த நடராஜ பெருமானுக்கு மலரால் அலங்கரிக்கப்பட்டு கோபுர தீப ஆராதனை மற்றும் பல்வேறு தீப ஆராதனைகள் நடைபெற்றது. இந்த புனித நிகழ்வின் போது, ஆலயம் முழுவதும் அரோகரா அரோகரா என்ற பக்தர்களின் முழக்கத்தால் அதிர்ந்தது. ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து ஆன்மீக மகிழ்ச்சியில் திளைத்தனர்.



ஆருத்ரா தரிசன விழாவை முன்னிட்டு, ஆலயத்திற்கு வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் விபூதி பிரசாதம், மை பிரசாதம் மற்றும் ஆருத்ரா பிரசாதம் வழங்கப்பட்டது. மார்கழி மாதத்தில் நடராஜ பெருமானுக்கு நடைபெறும் இந்த ஆருத்ரா தரிசனம் மிகுந்த புண்ணிய பலனை தரும் என நம்பப்படுவதால், சுற்றுவட்டார கிராமங்களைச் 500 மேற்பட்ட பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்த விழாவானது, பக்தர்களின் மனங்களில் ஆன்மீக உற்சாகத்தையும், இறை நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்தது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# தென்காசி மாவட்ட போர்வெல் ஏஜென்ட் நலச்சங்கம் மற்றும் உரிமையாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் வேலை நிறுத்தம் வாபஸ்



தென்காசி ஜன.04-

தென்காசி மாவட்ட போர்வெல் ஏஜென்ட் நலச்சங்கம் மற்றும் உரிமையாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் கடந்த 29/12/2025 முதல் போர்வண்டிகளின் தொடர் வேலை நிறுத்தம் நடைபெற்று வந்தது.அது சம்மந்தமாய் வீரசிகாமணி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சங்க தலைவர் அய்யங்கண்ணு செயலாளர் மணியன் மற்றும் வாகன உரிமையாளர்கள் முத்தையா, பரமசிவன் மற்றும் பலரும் திருச்செங்கோடு சேர்ந்த உரிமையாளர்கள் பலரும் ஏஜென்ட்கள் பலரும் கலந்து கொண்டனர். அதில் ஒருமனதாய் டிரில்லிங் விலைகளை உயர்த்தி நிர்ணயம் செய்து புதிய விலைப்பட்டியல் வெளியிடப்பட்டது. இதனையடுத்து வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. புதிய விலைப்பட்டியல் படி வாகனங்களை இயக்க உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள மல்லேஸ்வரம் தொகுதி எம்.எல்.ஏ., சுரேஷ் குமார். 70 வயதான இவர் பெங்களூரு - கன்னியாகுமரி வரை 5 நாட்களில் சைக்கிளில் 702 கி.மீ. பயணித்து குமரி வந்தார்.

## தென்காசியில்

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம்



தென்காசி, ஜன.04-

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் தறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் தென்காசி அருகே உள்ள மேலகரம் சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாநில தலைவர் எஸ்.ரமேஷ் தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் ச.ராஜசேகரன், மாவட்ட மாநில பொருளாளர் நா.புகழேந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் கடந்த கால நடவடிக்கைகள், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உடன் நடைபெற்ற சந்திப்பு விவரம், வரும் ஜனவரி 6-ம் தேதி நடத்தும் காலம் வரையற்ற வேலை நிறுத்தத்தில் பங்கேற்பது, சென்னை ஊரக வளர்ச்சி இயக்கத்தில் 30.01.2026 அன்று பெருந்திரள் முறையீடு போராட்டத்தில் கலந்து கொள்வது, சங்கத்தின் உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்துவது, டெல்லி தர்ணா போராட்டத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில துணைத்தலைவர்கள் பாஸ்கர்பாபு, செல்வ குமார், ஜெய்சங்கர், சார்லஸ் சசிகுமார், வெங்கிடாசலம், குமார், லியாகத் அலி, ராமநாதன், மாநில செயலாளர்கள் ஜெகஜீவன்ராம், சங்கர், பாலமுருகன், வினோத் குமார், விஜய குமார், விஜய குமார்,

செந்தில்குமார், சந்தோஷ் குமார், மாநில தணிக்கையாளர்கள் சென்ராயன், ஜாகிர் உசேன் ஆகியோர், சங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

இந்த நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட தலைவர் இராமநாதன், மாவட்ட பொருளாளர் , மாவட்ட செயலாளர் மாணிக்கவாசகம், மாநில செயற்குழு உறுப்பினர் கணேசன், மாவட்டத் துணைத் தலைவர் பழனி, மாவட்ட மகளிர் அணி துணைக் குழு அமைப்பாளர் ஜெயலட்சுமி, மாவட்ட இணை செயலாளர் முத்துக் குமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் நடராஜன், மாவட்டத் துணைத் தலைவர் சீனிவாசன் செல்வம், மாவட்ட செயற்குழு உறுப்பினர் அந்தோணி, முன்னாள் மாவட்ட செயலாளர் பழனி, முன்னாள் மாநில துணை தலைவர்சண்முகசுந்தரம், முன்னாள் மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன், பொது சுகாதாரத்துறை மாநில தலைவர் கங்காதரன், தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நியூசி.,க்கு எதிரான ஒருநாள் தொடர்:

# சுப்மன் கில் தலைமையில் இந்திய அணி அறிவிப்பு

**மும்பை, ஜன. 04-**

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணியை பி.சி.சி.ஐ. நேற்று அறிவித்தது. ஷ்ரேயாஸ் ஐயர் துணைக் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.



**சுற்றுப்பயணம்...**

நியூசிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் முதலில் நடைபெறுகிறது. முதல் ஒருநாள் போட்டி வருகிற ஜனவரி 11 ஆம் தேதி வதோதராவில் நடைபெறுகிறது. இந்த நிலையில், நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியை பி.சி.சி.ஐ. நேற்று அறிவித்தது. 15 பேர் கொண்ட இந்திய அணியை சுப்மன் கில் கேப்டனாக வழிநடத்துகிறார். ஷ்ரேயாஸ் ஐயர் துணைக் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### இந்திய அணி விவரம்:

**சுப்மன் கில்** (கேப்டன்), ரோஹித் சர்மா, விராட் கோலி, கே.எல்.ராகுல், ஷ்ரேயாஸ் ஐயர், வாஷிங்டன் சுந்தர், ரவீந்திர ஜடேஜா, முகமது சிராஜ், ஹர்ஷித் ராணா, பிரசித் கிருஷ்ணா, குல்தீப் யாதவ், ரிஷப் பந்த், நிதீஷ் குமார் ரெட்டி, அர்ஷ்தீப் சிங், யஷஸ்வி ஜெய்ஸ்வால்.

# சீருடை பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, ஜன. 04-**

தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 750 பேருக்கு பணி நியமன ஆணைகளை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தால் அண்மையில் நடத்தி முடிக்கப்பட்ட தேர்வுகள் மூலம் 621 காவல் உதவி ஆய்வாளர்கள், 129 தீயணைப்பு நிலைய அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டனர். இந்த நிலையில், இவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 621 காவல் உதவி ஆய்வாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்தினார். தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வான 129 தீயணைப்பு நிலைய அதிகாரிகளுக்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின் பணி நியமன ஆணைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.



**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில் நேற்று, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் 2024-2025-ம் ஆண்டில் மாநில அளவில் பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் சிறந்த நெசவாளர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 8 விருதாளர்களுக்கு 20 லட்சம் ரூபாயும், சிறந்த வடிவமைப்பாளர்களுக்கான விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 2 விருதாளர்களுக்கு 1.50 லட்சம் ரூபாயும், சிறந்த இளம் வடிவமைப்பாளர்கள் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 3 விருதாளர்களுக்கு 2.25 லட்சம் ரூபாயும், என மொத்தம் 13 விருதாளர்களுக்கு 23.75 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.**

# விதர்பா அணிக்கு எதிராக முதல் சதமடித்த ஹார்திக்

### ஒரே ஓவரில் 34 ரன்கள் விளாசல்

**மும்பை, ஜன. 04-**

விஜய் ஹசாரே கோப்பையில் ஒரே ஓவரில் 5 சிக்ஸர்கள் அடித்து அசத்திய ஹார்திக் பாண்டியாவின் விடியோ வைரலாகி வருகிறது. அதிரடியாக விளையாடிய ஹார்திக் பாண்டியா 68 பந்துகளில் தனது முதல் லிஸ்ட் ஏ சதம் அடித்து அசத்தினார்.

**பல நகரங்களில்...**

33-வது விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் எலைட் பிரிவில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. இதில் நேற்று நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் பரோடா - விதர்பா அணிகள் மோதுகின்றன. முதலில் பேட்டிங் செய்த பரோடா அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 293 ரன்கள் எடுத்தது. அந்த அணியில் சிறப்பாக விளையாடி சதமடித்த ஹர்திக் பாண்டியா 133 ரன்கள் எடுத்தார்.



**ஐந்து சிக்சர்கள்....**

விஜய் ஹசாரே கோப்பையில் பரோடா அணியும் விதர்பா அணியும் மோதின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற விதர்பா அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது. முதலில் பேட்டிங் ஆடிய பரோடா அணி 50 ஓவர்களில் 293/9 ரன்கள் எடுத்தது. இந்தப் போட்டியில் ஹார்திக் பாண்டிய 62 பந்துகளில் 66 ரன்கள் எடுத்திருந்தபோது, போட்டியின் 39-வது ஓவரை பார்த் ரேகாடே வீசினார். இந்த ஓவரில் 5 சிக்ஸர்கள், 1 பவுன்டரி அடித்த ஹார்திக் 68 பந்துகளில் சதத்தை நிறைவு செய்தார்.

பின்னர் 133 ரன்களில் ஹார்திக் பாண்டியா ஆட்டமிழந்தார். விதர்பா அணியில் யஷ் தாக்குர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

### இடைநிலை ஆசிரியர்களின்

# கோரிக்கைகள் தொடர்பாக சங்கங்களுடன் தொடர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்

### நல்ல முடிவு எடுப்போம் என அமைச்சர் அன்பில் மகேஸ் தகவல்

**சென்னை, ஜன. 04-**

இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக சங்கங்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்று தெரிவித்துள்ள அமைச்சர் அன்பில் மகேஸ், போராடும் ஆசிரியர்கள் என் குடும்ப உறுப்பினர்கள் என்றும் ஆசிரியர்களை கைவிட மாட்டோம் என்றும் அவர் உறுதிபட தெரிவித்துள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அமைச்சர் அன்பில் மகேஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: "போராட்டம் நடத்தி வரும் இடைநிலை ஆசிரியர்களிடம் நானும், அதிகாரிகளும் கடந்த 7 நாட்களாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். நேற்று முன்தினம் திருச்சியில் இருந்து விமானத்தில் வரும்போது கூட முதல்வர் இதுபற்றி கேட்டார். ஓய்வூதியம் தொடர்பாக இன்று காலை 11 மணிக்கு ஆலோசனை நடைபெறுக்றது. அந்த கமிட்டி கூட்டம் முடிந்தவுடன் இதுதொடர்பாக ஆலோசனை நடத்தப்படும்.

இடைநிலை ஆசிரியர்கள் பற்றி பேசும்போது நிதித்துறை சில கருத்துகளை என்னிடம் சொல்லியுள்ளனர். அதை தெளிவுபடுத்தும் வகையில் நாங்கள் சில கோரிக்கைகளை வைக்கவுள்ளோம். ஓய்வூதியம் தொடர்பாக முதல்வர் என்னிடம் என்ன அறிவுறுத்துகிறாரோ அதை நிதி குழுவில் சொல்லி நல்ல முடிவு எடுக்கப்படும். நாங்கள் வாக்குறுதியில் சொன்னதைத்தான் கேட்கிறார்கள். அவர்கள் புதிதாக எதையும் சொல்லவில்லை.

பொதுவாக ஊதியக் குழுவில் உயர்வு இருக்கும். பணி நியமனம் தொடர்பாக, சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்தவுடன் சொன்ன சம்பளம் ஒன்றாகவும், நியமனத்துக்கு பிறகு பெறும் சம்பளம் ஒன்றாகவும் இருக்கும். அந்த வித்தியாசத்தை சரி செய்ய சொல்லி கேட்கிறார்கள். அதை நிறைவேற்றி தருகிறோம் என்று சொல்லியுள்ளோம்.

இது என்துறை சார்ந்த பிரச்சனை. துறை சார்ந்த அமைச்சர் என்ற முறையில் அதற்கு நல்ல விடிவை கொடுக்க வேண்டிய பொறுப்பு எனக்குள்ளது. பொறுமையாக இருந்தாலும் அதை நிறைவேற்றுவோம் என்கிற நம்பிக்கை இருக்கிறது. சங்கங்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துகிறோம். போராடும் ஆசிரியர்கள் என் குடும்ப உறுப்பினர்கள். ஆசிரியர்களை கைவிட மாட்டோம் என்றார்.

### இலங்கை கடற்படையால் தற்போது கைது செய்யப்பட்ட

# 9 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

### மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**சென்னை, ஜன. 04-**

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், இலங்கைக் காவலில் இருக்கும் அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்யவும், உரிய தூதரக வழிமுறைகள் மூலம் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வலியுறுத்தி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் நேற்று முன்தினம் (02.01.2026) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை விடுவிக்கவும், தொடர்ந்து இதுபோன்ற கைது சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்கவும், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை மீனவ கிராமத்திலிருந்து 9 மீனவர்கள் இரண்டு மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 02.01.2026 அன்றிரவு இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதாகக் கவலையோடு குறிப்பிட்டுள்ள முதல்வர் , புத்தாண்டின் தொடக்கத்திலேயே நடைபெற்றுள்ள இச்சம்பவம், தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் அவல நிலையை மீண்டும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் இதுபோன்று தொடர்ந்து கைது செய்வதும், அவர்களது மீன்பிடிப் படகுகளைப் பறிமுதல் செய்வதும் தடையின்றி நடைபெறுவது மிகுந்த கவலைக்குரிய விஷயமாகும் என்று குறிப்பிட்டுள்ள முதல்வர் , தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 73 மீனவர்களும், 251 மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் காவலில் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடர்ச்சியான கைது சம்பவங்கள், தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமுதாய மக்களிடையே பெருத்த இன்னல்களையும், பதட்டத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் இனிமேல் நடைபெறுவதைத் தடுக்கவும், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்திடவும், மத்திய அரசு உரிய தூதரக வழிமுறைகள் மூலம் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கரை, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### டி-20 உலகக் கோப்பை தொடர்:

# தென் ஆப்பிரிக்க, ஜிம்பாப்வே நமீபியா அணிகள் அறிவிப்பு

**கேப்டவுன், ஜன. 04-**

டி-20 உலகக் கோப்பை தொடரில் விளையாடும் தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே, நமீபியா அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**20 அணிகள் போட்டி...**

10-வது டி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி பிப்ரவரி 7-ம் தேதி முதல் மார்ச் 8-ம் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது. இந்த போட்டியில் பங்கேற்கும் 20 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்த தொடருக்கான அணியை ஒவ்வொரு நாடுகளும் அறிவித்து வருகின்றன. இந்த நிலையில், டி-20 உலகக் கோப்பை தொடருக்கான ஜிம்பாப்வே அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சிகந்தர் ராசா கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஜிம்பாப்வே அணி:**

சிக்கந்தர் ராசா (கேப்டன்), பிரையன் பென்னட், ரியான் பர்ல், கிரேம் க்ரீமர், பிராட்லி எவன்ஸ், கிளைவ் மடாண்டே, டினோ டெண்டா மபோசா, தடிவானாஷே மருமணி, வெலிங்டன் மசகட்சா, டோனி முனியோங்கா, தஷிங்கா முசெகிவா, ப்ளெஸிங் முசரபானி, டியான் மையர்ஸ், ரிச்சர்டன் மையர்ஸ், பிரெண்டன் டெய்லர்.



**தென் ஆப்பிரிக்கா அணி:**

இதற்கிடையே டி-20 உலகக் கோப்பை தொடருக்கான தென் ஆப்பிரிக்கா அணி அறிவிக்கப்பட்டுள்ளது. மார்க்ரம் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். டிரிஸ்டன் ஸ்டப்ஸ் , ரிக்கல்டன் அணியில் இடம் பெறவில்லை. மார்க்ராம், போஷ், டெவால்ட் பிரீவிஸ், டி காக், டோனி டி சோர்ஜி, டனவன் பெரேரா, மார்கோ ஜான்சன், லிண்டே, மஹாராஜ், மபாகா, டேவிட் மில்லர், லுங்கி என்கிடி, ஆன்ரிச் நார்ட்ஜே, ரபாடா, ஜேசன் ஸ்மித்.

**நமீபியா அணி அறிவிப்பு...**

டி-20 உலகக் கோப்பைத் தொடருக்கான நமீபியா அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. 15 பேர் கொண்ட அணியை ஜெர்ஹார்டு எராஸ்மஸ் கேப்டனாக வழிநடத்துகிறார். ஜெர்ஹார்டு எராஸ்மஸ் (கேப்டன்), ஸேன் கிரீன், பெர்னார்டு ஷால்ட்ஸ், ரூபென், ஜேஜே ஸ்மித், ஜேன் ஃப்பிரைலிங்க், லோரென் ஸ்டீன்கம்ப், மலன் க்ரூகர், நிக்கோல் லாஃப்டி ஈட்டன், ஜேக் பிரஸ்ஸெல், பென் ஷிக்காங்கோ, ஜேசி பால்ட், டைலான் லெய்ச்சர், டபிள்யூபி மைபர்க், மாக்ஸ் ஹெனிங்கோ. டி-20 உலகக் கோப்பைத் தொடரில் வருகிற பிப்ரவரி 10 ஆம் தேதி நடைபெறும் தனது முதல் போட்டியில் நமீபியா, நெதர்லாந்தை எதிர்த்து விளையாடுவது குறிப்பிடத்தக்கது.

## ரஹ்மானை விடுவித்தது கே.கே.ஆர்.

கே.கே.ஆர். அணி வங்கதேச வேகப் பந்துவீச்சாளர் முஷ்தஃபிசூர் ரஹ்மானை தனது அணியிலிருந்து நீக்கியது. இவருக்குப் பதிலாக வெளிநாட்டு வீரர் ஒருவரை கே.கே.ஆர். அணி எடுத்துக் கொள்ள பி.சி.சி.ஐ. அனுமதி வழங்கியுள்ளது.




வங்கதேசத்தில் இந்துக்கள் கொடுமைப்படுத்தப்பட்டு வருவதால் அந்தப் பிரச்னை இந்தியாவில் எதிரொலிக்கப்பட்டு வருகின்றது. சமீபத்தில் இந்து அமைப்புகள் கே.கே.ஆர். அணியின் உரிமையாளர் ஷாருக் கானை தேசத் துரோகி என விமர்சித்தது.

இதனைத் தொடர்ந்து பி.சி.சி.ஐ. இந்த விவகாரத்தில் தலையிட்டு கே.கே.ஆர். அணி முஷதஃபிசூர் ரஹ்மானை விடுவிக்கும்படி கூறியிருந்தது. ஐபிஎல் மினி ஏலத்தில் இவரை எடுக்க சிஎஸ்கே ரூ.9 கோடி வரை சென்றது. இறுதியில் ரூ.9.2 கோடிக்கு கே.கே.ஆர். அணி எடுத்தது. ஏற்கெனவே, இவர் சிஎஸ்கே அணியில் விளையாடி இருக்கிறார்.

இந்நிலையில், கே.கே.ஆர். அணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: அடுத்த ஐபிஎல் 2026 சீசன் தொடங்குவதற்கு முன்பாக பி.சி.சி.ஐ. / ஐபிஎல் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் பரிந்துரையின்படி கே.கே.ஆர். முஷ்தஃபிசூர் ரஹ்மானை அணியில் இருந்து விடுவிக்கிறது. இது பி.சி.சி.ஐ. தெரிவித்த அறிவுரையின்படி நடத்தப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது.

## தேர்வாகுவாரா தேவ்தத் படிக்கல்?

தேவ்தத் படிக்கல் விஜய் ஹசாரே கோப்பையில் இந்த சீசனிக் மட்டும் ஐந்து போட்டிகளில் தனது நான்காவது சதத்தை பதிவு செய்துள்ளார். லிஸ்ட் ஏ போட்டிகளில் 83 சராசரி வைத்திருக்கும் இவர் 2027 ஒருநாள் உலகக் கோப்பைப் போட்டிக்குத் தேர்வாகுவாரா என்ற எதிர்பார்ப்பு நிலவிவருகிறது. விஜய் ஹசாரே கோப்பையில் கர்நாடகத்துக்கு எதிரான போட்டியில் திரிபுரா டாஸ் வென்று பந்துவீச்சைத் தேர்வு செய்தது. முதலில் பேட்டிங் செய்த கர்நாடக அணி 50 ஓவர்களில் 332-7 ரன்கள் எடுத்தது. இதில் படிக்கல் 108 , அபிநவ் மனோகர் 79 ரன்கள் எடுத்தார்கள்.



அடுத்து விளையாடிய திரிபுரா 252 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. 80 ரன்கள் வித்தியாசத்தில் கர்நாடகம் வென்றது. தேவ்தத் படிக்கல் ஆட்ட நாயகன் விருது வென்றார். இந்த சீசனில் 5 விஜய் ஹசாரே போட்டிகளில் 4ஆவது போட்டியைத் தவிர மற்ற அனைத்திலும் சதம் அடித்து அசத்தியுள்ளார். 2026 டி20 உலகக் கோப்பை போட்டியில் இல்லாவிட்டாலும் அடுத்தாண்டு நடைபெறும் ஒருநாள் உலகக் கோப்பை போட்டிகளில் விளையாடுவாரா என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

# வரும் சட்டசபை தேர்தலில் வெற்றி பெறப்போவது யார்?

### வெளியான புதிய கருத்து கணிப்பால் பரபரப்பு

**சென்னை, ஜன. 04-**

லயோலா கல்லூரி முன்னாள் மாணவர் அமைப்பான ஐ.டி.பி.ஐ., தமிழகம் முழுவதும் 2026 சட்டசபை தேர்தல் குறித்து கருத்துகணிப்பு மேற்கொண்டுள்ளது.

லயோலா கல்லூரி முன்னாள் மாணவர் அமைப்பான ஐ.டி.பி.ஐ., தமிழகம் முழுவதும் 2026 சட்டசபை தேர்தல் குறித்து கருத்துகணிப்பு மேற்கொண்டுள்ளது. அதன் முடிவுகளை அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருநாவுக்கரசு நிருபர்களிடம் கூறியதாவது: இந்திய அரசியல் ஜனநாயக யுக்திகள் சார்பில் 61-வது கள ஆய்வு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இந்த கள ஆய்வில் வருகின்ற சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு முதல்வராக வரும் வாய்ப்பு யாருக்கு அதிகம் இருக்கிறது என்ற கேள்விக்கு 55 சதவீதம் பேர் மு.க.ஸ்டாலின் என்று கூறியுள்ளனர். இதில் 2-வது இடத்தை விஜய்யும், 3-வது இடத்தை எடப்பாடி பழனிசாமியும் பெறுகின்றனர்.

2021 சட்டசபை தேர்தல் தி.மு.க. தேர்தல் அறிக்கையை நிறைவேற்றியதா என்ற கேள்விக்கு 25 சதவீதம் பேர் ஆம் என்றும், ஓரளவு என்று 17 சதவீதம் பேரும், இல்லை என்று 47 சதவீத பேரும் கூறியிருக்கின்றனர். நான்கே முக்கால் ஆண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்பாடு குறித்து பொது மக்களிடம் கேட்டதற்கு 37 சதவீதம் பேர் நன்றாக இருப்பதாகவும், 54 சதவீதம் பேர் சரியில்லை என்றும், கருத்து சொல்லவிருப்பம் இல்லை என்று 39 சதவீதம் பேர் கூறியிருக்கிறார்கள்.

நடிகர் விஜய் அரசியல் வருகையால் தி.மு.க.வுக்கே அதிகம் பாதிப்பு என்றும், அடுத்து விடுதலை சிறுத்தைகள் கட்சி, அ.தி.மு.க.வுக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளனர். ஜெயலலிதா மறைவுக்கு பிறகு எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. தலைமைப் பொறுப்பை ஏற்ற நிலையில், கட்சி வளர்ச்சி அடையவில்லை என்று 60 சதவீதம் பேர் கூறியுள்ளது. விஜய்யின் அரசியல் நிலைப்பாடு சரியில்லை என்று 53 சதவீதம் பேரும், நன்றாக இருப்பதாக 22 சதவீதம் பேரும் கூறியுள்ளனர்.

இளம் வாக்காளர்களை கவருவதில் விஜய் முதல் இடம் பிடித்துள்ளார். அண்ணாமலைக்கு 2-வது இடம் கிடைத்துள்ளது. எம்.ஜி.ஆருக்கு நிகரான தலைவராக விஜய்யை மக்கள் பார்க்கிறார்களா என்ற கேள்விக்கு இல்லை என்று 50 சதவீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர். சீமான் வருகிற சட்டசபை தேர்தலில் எம்.எல்.ஏ.வாக வேண்டும் என்று 69 சதவீதம் பேர் கூறியுள்ளனர்.

இந்த தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவ வாய்ப்பு இருக்கிறது. வாக்குகள் சிதறும் என்பதால், இது தி.மு.க. கூட்டணிக்கு சாதகமாக அமையும் என்று கூறுவது தவறு. தி.மு.க. வலுவான கூட்டணியை அமைத்துள்ளது. த.வெ.க. வலுவான கூட்டணியை அமைத்தால் 2-வது இடத்தை பிடிக்கும். அ.தி.மு.க. 2-வது இடத்துக்கு கடுமையாக போராடும். சீமான் 4-வது இடத்தையே பிடிப்பார். தி.மு.க. 30.62 சதவீத வாக்குகளை பெற்று ஆட்சி அமைக்க வாய்ப்பு உள்ளது. அ.தி.மு.க. கூட்டணி 26.39 சதவீத வாக்குகளும், த.வெ.க.வுக்கு 21.07 சதவீத வாக்குகளும் பெறும். நாம் தமிழர் கட்சிக்கு 7.50 சதவீத வாக்குகள் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# வங்கதேசம் செல்கிறது இந்திய கிரிக்கெட் அணி

**புதுடெல்லி, ஜன. 04-**

இந்திய கிரிக்கெட் அணி வங்காளதேசம் செல்கிறது. அங்கு ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட் தொடரில் விளையாட இருப்பதாக வங்காளதேச கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

**சுற்றுப்பயணம்....**

இந்திய அணி வங்காளதேசத்தில் சுற்றுப் பயணம் செய்து தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட் தொடரில் விளையாட இருப்பதாக வங்காளதேச கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது. செப்டம்பர் 1, 3, 6-ந்தேதிகளில் ஒருநாள் போட்டிகளும் செப்டம்பர் 9, 12, 13-ந்தேதிகளில் டி20 போட்டிகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அணி ஆகஸ்ட் 28-ந்தேதி வங்காளதேசம் சென்றடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது வங்காளதேசத்தில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையில், பிசிசிஐ இந்திய அணியை அனுப்ப சம்மதம் தெரிவிக்குமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

## விஜய் ஹசாரே தொடரில் கில்

33-வது விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. இந்த தொடரில் இந்திய அணியின் நட்சத்திர வீரர்கள் விராட் கோலி, ரோகித் சர்மா, ரிஷப் பண்ட் விளையாடினர். இந்த நிலையில், இந்திய ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியின் கேப்டன் கில், விஜய் ஹசாரே கோப்பை தொடரில் நாளை முதல் விளையாட உள்ளார். பஞ்சாப் அணிக்காக அவர் விளையாட உள்ளார்.பஞ்சாப் - சிக்கிம் அணிகள் நாளை மோத உள்ளன.

# பொங்கல் பண்டிகைக்கு சிறப்பு பேருந்துகளை இயக்குவது குறித்து ஜன.6-ம் தேதி ஆலோசனை

**சென்னை, ஜன. 04-**

பொங்கல் பண்டிகைக்கு சிறப்பு பேருந்துகளை இயக்குவது தொடர்பாக வரும் 6-ம் தேதி முக்கிய ஆலோசனை நடைபெறுகிறது.

பொங்கல் பண்டிகை வரும் 15 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. சென்னை, கோவை போன்ற பெருநகரங்களில் வசிக்கும் வெளியூர் மக்கள் பொங்கல் பண்டிகையை சொந்த ஊர்களுக்கு சென்று கொண்டாடுவது வழக்கம். பொங்கல் பண்டிகையையொட்டி பேருந்து மற்றும் ரயில்களில் டிக்கெட்டுகள் விற்று தீர்ந்துவிட்டன.

பயணிகள் நலன் கருதி பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

அந்த வகையில் பொங்கல் பண்டிகைக்கு சிறப்பு பேருந்துகளை இயக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான முக்கிய ஆலோசனைக் கூட்டம் வரும் 6 ஆம் தேதி நடைபெறுகிறது. சுமார் 1,600 பேருந்துகளை இயக்க அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்க திட்டமிட்டுள்ளதால் சிறப்பு பேருந்துகள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தெற்கு ரயில்வேயும் சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது.



பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினையும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினையும் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## அருப்புக்கோட்டை ஒன்றிய பகுதிகளில்
# 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேவர் பிளாக் சாலை: அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்



**அருப்புக்கோட்டை, ஜன. 04-**

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பாளையம்பட்டி ஊராட்சி காமராஜர் நகர், ராஜீவ் நகர் ஆத்திபட்டி ஊராட்சி பெத்தம்மாள் நகர், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி ஜெயா நகர், பந்தல்குடி சூர நாயக்கன்பட்டி, செட்டிகுறிச்சி ஊராட்சிகளில் ரூ.12 கோடி மதிப்பில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகளை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பாளையம்பட்டி ஊராட்சி பசும்பொன் நகரில் 13.30 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட ரேஷன் கடையை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், அருப்புக்கோட்டை தாசில்தார் செந்தி வேல், அருப்புக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமேஸ்வரி, காஜாமைதீன் பந்தே நவாஸ் ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அழகு ராமானுஜம் மற்றும் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ராஜபாளையம்: திருவாதிரை திருநாளில் ஆருத்ரா தரிசனம்

**ராஜபாளையம், ஜன. 04-**

மார்கழி மாதம் வரும் திருவாதிரை தினத்தில் சிவாலயங்களில் ஆருத்ரா தரிசனம் நடைபெறுவது வழக்கம்.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பெத்தவ நல்லூர் அருள்மிகு ஸ்ரீ தவம் பெற்ற நாயகி சமேத ஸ்ரீ மாயூரநாத சுவாமி கோவிலில் வழக்கம்போல் இந்த ஆண்டும் திருவாதிரை திருநாளில் ஆருத்ரா தரிசனம் சிறப்பாக நடைபெற்றது, மாயூரநாதர், அஞ்சல் நாயகி உடன் சப்பரத்தில் எழுந்தருளி அப்பகுதியில் வீதி உலா கொண்டுவரப்பட்டு கோவில் 4 ரத வீதிகளிலும் சப்பரம் கொண்டுவரப்பட்டது. சிவபுராணம் பாடிய சிவ பக்தர்கள் ஊர்வலமாக பின் தொடர்ந்து வந்தனர். ஏராளமான பெண்கள் பக்தர்கள் திரண்டு வந்து தரிசனம் செய்தனர்.



பின்னர் கோவிலில் சமயக் குரவர்கள் முன்னிலையில் அருள்மிகு சிவபெருமான் ஆனந்த தாண்டவம் ஆடும் காட்சியினை சிறப்பாக செய்திருந்தனர். அனைவருக்கும் திருவாதிரை திருவிழாவை முன்னிட்டு ஒரு வாய் களி பிரசாதம் மற்றும் கருப்பு மை போன்றவை வழங்கப்பட்டது. அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது. கோவில் நிர்வாகம் மற்றும் சிவனடியார்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# ஒட்டன்சத்திரத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா




**ஒட்டன்சத்திரம், ஜன. 04-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் 267வது பிறந்தநாள் விழா வீர பாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டு கழக மாநில பொதுச் செயலாளர் ராமகிருஷ்ணன் தலைமையில் வீர பாண்டிய கட்டபொம்மனின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

விழாவில் தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள், தர்மராஜ். எஸ். ஆர். கே. பாலு, விருப்பாச்சி கோபால் நாயக்கர் சேவா சங்கத் தலைவர் செந்தில் குமார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தங்கபாண்டியன், பொருளாளர் பெருமாள் சாமி, மதிமுக நிர்வாகிகள் தமிழ்வேந்தன், முருகராஜ். மற்றும் நிர்வாகிகள் செல்லக்காம், பாலாம்பிகை ரங்கசாமி, ராமச்சந்திரன், பொன்ராஜ், பெருமாள் சாமி, திருமலைச்சாமி முன்னாள் ஊராட்சி மன்ற துணைத்தலைவர்கள் கௌரி சரவணன், பாலமுருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# கைலாசநாதர், அண்ணாமலையார் கோவில்களில் நடராஜருக்கு சிறப்பு பூஜை



**நத்தம். ஜன, 04-**

திண்டுக்கல் நத்தம்-கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்தை முன்னிட்டு நேற்று அதிகாலை நடராஜருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆருத்ரா தரிசனம் நடந்தது.இதையொட்டி கோவில் வளாகத்தில் யாகசாலை அமைக்கப்பட்டு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க கலச பூஜை நடந்தது.பின்னர் நடராஜருக்கு இளநீர், சந்தனம், ஜவ்வாது, மஞ்சள், தேன் போன்ற 21 வகை அபிஷேகப் பொருட்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகமும், மூலவர் கைலாசநாதர்,செண்பகவல்லி தாயாருக்கும், சிவ சிறப்பு அபிஷேக ஆராதனையும் நடைபெற்றது.

பின்னர் நடராஜர் சமேத சிவகாமி அம்மன் தேரில் எழுந்தருளி நகரின் முக்கிய வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.இதைப்போலவே குட்டூர் அண்ணாமலையார் கோவிலில் ஆருத்ரா தரிசன விழா நடந்தது. இதையொட்டி கோவில் வளாகத்தில் யாகசாலை அமைக்கப்பட்டு கோ பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடந்தது.பின்னர் நடராஜருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# அருப்புக்கோட்டையில் ஆருத்ரா தரிசன விழா: நடராஜருக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள்



**அருப்புக்கோட்டை, ஜன. 04-**

அருப்புக்கோட்டையில் அமுதலிங்கேஸ்வரர் கோவில் வளாகத்தில் ஆருத்ரா தரிசன விழாவை முன்னிட்டு சிவகாமி அம்பிகா சமேத ஆனந்த நடராஜர் சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

ஆருத்ரா தரிசன விழாவை முன்னிட்டு கோயில் அதிகாலை 3 மணிக்கு திறக்கப்பட்டு திருப்பள்ளி எழுச்சி நடைபெற்றது. பின்னர் நடராஜர் சன்னதிக்கு முன்பு கோமாதா பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து சிவகாமி அம்பிகா சமேத ஆனந்த நடராஜருக்கு பால், பன்னீர், தயிர், நெய், உள்பட 21 வாசனை திரவியங்கள் சிறப்பு அபிஷேகம் அலங்காரம் நடைபெற்றது.

பின்னர் மாணிக்கவாசகர் கோவிலில் வலம் வந்து நடராஜர் சுவாமிக்கு காட்சியளித்தார். பிறகு சிவகாமி அம்பிகா நடராஜருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு நடராஜர் தரிசனம் செய்து பிரசாதம் பெற்றுச் சென்றனர். ஆருத்ரா தரிசன நிகழ்ச்சி ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின்முறைத் தலைவர் சுதாகர், டிரஸ்ட் கணேசன் மற்றும் உறவின்முறை கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# சாத்தூர் அருகே கருந்திரி தயாரித்த வட மாநில தொழிலாளர்கள் 2 பேர் உயிரிழப்பு; 3 பேர் கைது

**சாத்தூர், ஜன. 04-**

சாத்தூர் நத்தத்துப்பட்டி அருகே உள்ள சிறுகுளத்தில் திமுக முன்னாள் ஒன்றிய செயலாளர் சரவணகுமார் என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் சட்ட விரோதமாக பட்டாசுக்கு தேவையான கருந்திரி தயாரித்த போது மின் கசிவினால் தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ விபத்தில் அசாம் மாநிலத்தைச் சேர்ந்த ஷபிகுல் அலி (13) செய்யது உசைன் (14) ஆகிய இரு சிறுவர்கள் உடல் கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இச்சம்பவம் குறித்து அப்பையநாயக்கன்பட்டி போலீஸார் தோட்டத்தின் உரிமையாளர் சரவணகுமார் மற்றும் அவரது மனைவி கவிதா, சூப்பர்வைசர் பெருமாள் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இதில் சரவணகுமார்(48)மற்றும் சூப்பர்வைசர் பெருமாள் (36) ஆகிய இருவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மதுரை - ராஜபாளையம் வழியாக
# பொங்கல் பண்டிகைக்கு சிறப்பு ரயில் இயக்கம்: ரயில்வே அறிவிப்பு

**விருதுநகர், ஜன. 04-**

மதுரை - ராஜபாளையம் வழியாக 2026-ம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு அமர்ந்து பயணிக்கும் இருக்கை வகுப்பு சிறப்பு ரயில்.(06025/06026) ஈரோடு-செங்கோட்டை சிறப்பு ரயில்(06025) இயக்கப்படுகிறது. இந்த ரயில் வருகிற 13-ம் தேதி செவ்வாய்`ஈரோடில் இருந்து 4 மணிக்கு புறப்பட்டு காட்பாடி, திருவள்ளூர், சென்னை பெரம்பூர், எழும்பூர் செல்கிறது.

இதேபோல் ராஜபாளையம் வழி செங்கோட்டை-போத்தனூருக்கு வருகிற 7-ம் தேதி (புதன்) இரவு 8.45 மணிக்கு புறப்பட்டு செங்கோட்டை, சென்னை எழும்பூர், பெரம்பூர் திருவள்ளூர், காட்பாடி, ஈரோடு, திருப்பூர், போத்தனூருக்கு செல்வதால் பயணிகள் இந்த வாய்பினை பயன்படுத்தி கொள்ளலாம்.



**2026 ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்மான எடப்பாடி கே.பழனிச்சாமியை அ.தி.மு.க. நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளரும், திண்டுக்கல் மாவட்ட செயலாளருமான முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.**

# மேலூரில் மரகன்று நடும் விழா

**மேலூர், ஜன. 04-**

ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மேலூர் நகராட்சிக்குட்பட்ட அம்மன் நகரில் அமைந்துள்ள அறிவுசார் மையம் மற்றும் நூலக ரோட்டில் சிறப்பான மரக்கன்று நடும் நிகழ்ச்சி சிறப்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

மேலூர் நகரின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த மரக்கன்று நடும் நிகழ்ச்சிக்கு மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின் தலைமை தாங்கினார். உடன் மேலூர் நகராட்சி ஆணையர் கிருஷ்ணவேனி பேசியதாவது:-

நகரில் பசுமை பரப்பை அதிகரிப்பதன் அவசியம் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் வலியுறுத்தினார்.



மேலூர் நகராட்சி பொறியாளர் முத்துகுமார் கூறியதாவது: மரம் நடுவதன் மூலம் நமது நாடு, நகரம் செழிக்கும், நாம் அன்றாட சுவாசிக்கும் சுவாச காற்றை மரத்தின் மூலம் எவ்வாறு பயன்பெறுகிறோம் என்பதை விளக்கிப் பேசினார். மரம் நடுதல் மூலம் நகராட்சி சுகாதார ஆய்வாளர் சா. தினேஷ்குமார் நிகழ்ச்சியில் பங்கேற்று, மரநடுதல் மூலம் காற்று மாசுபாட்டை குறைத்து பொதுமக்களின் உடல்நலத்தை பாதுகாக்க முடியும் என எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர் முனைவர் க. இளவரசு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அவர் கூறியாதவது: இந்த புத்தாண்டு மரநடுதல் நிகழ்ச்சி வருங்கால தலைமுறைக்காக இயற்கையை பாதுகாக்கும் ஒரு முன்னோடி முயற்சியாக அமைந்தது என்றும், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம், பாரம்பரிய மரங்களின் பயன்கள் மற்றும் அவற்றை பாதுகாப்பது தமிழர்களின் கடமை என விரிவாக விளக்கினார். மேலும், அவர் தனது சொந்த முயற்சியாக 50 மரக்கன்றுகளை வழங்கி, அவற்றை இந்த நிகழ்ச்சியில் நடவு செய்ய ஒப்படைத்தது அனைவரிடமும் பாராட்டைப் பெற்றது.

மதுரைக்கு (கடம்பாவனம்) பெயர் போன நாட்டு கடம்ப மரம், நாவல் மரம் மற்றும் இலுப்பை மரம் போன்ற பாரம்பரிய நாட்டு மரக்கன்றுகள் இந்நிகழ்ச்சியில் நடவு செய்யப்பட்டன. இம்மரங்கள் சுற்றுச்சூழல் சமநிலையை பாதுகாப்பதுடன், உயிரியல் பல்வகைமையை மேம்படுத்தும் தன்மை கொண்டவை என்பதால் சிறப்பாக தேர்வு செய்யப்பட்டன. குறிப்பாக நாட்டு கடம்ப மரம் மதுரை மாநகரின் வரலாற்று அடையாளமாக விளங்கும் கடம்பாவனத்தின் நினைவாக நடவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

மேலூர் நகராட்சி ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மரக்கன்றுகளை நடவு செய்து, அவற்றை பாதுகாத்து வளர்ப்போம் என்ற உறுதியையும் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. நிகழ்ச்சியின் முடிவில், மேலூர் நகரத்தை பசுமை நிறைந்த, தூய்மையான மற்றும் சுற்றுச்சூழல் நட்பு நகரமாக மாற்ற தொடர்ந்து இது போன்ற மரநடுதல் மற்றும் பசுமை திட்டங்கள் செயல்படுத்தப்படும் என நகர்மன்ற தலைவர் முகமது யாசின் அவர்கள் தெரிவித்தார்.

# திருஉத்தரகோசமங்கையில் ஆருத்ரா தரிசனம்: மரகத நடராஜர் மீது புதிய சந்தனம் பூசப்பட்டது

**ராமநாதபுரம், ஜன. 04-**

ராமநாதபுரம் அருகே உள்ள திருஉத்தரகோசமங்கை திருக்கோவிலில் அபூர்வ மரகத நடராஜர் மீது ஆருத்ரா தரிசனத்தையொட்டி புதிய சந்தனம் பூசப்பட்டது.



ராமநாதபுரத்தை அடுத்துள்ள புகழ்வாய்ந்த திருஉத்தரகோசமங்கை திருக்கோவிலில் அமைந்துள்ள அபூர்வ பச்சை மரகத நடராஜர் சிலை ஒளி ஒலி அதிர்வுகளால் பாதிக்கப்படும் என்பதற்காக ஆண்டுமுழுவதும் சந்தனக் காப்பு பூசப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். வருடத்தில் ஒருநாள் ஆருத்ரா தரிசனத்திற்கு முன்தினம் சந்தனக்காப்பு களையப்பட்டு பக்தர்களின் தரிசனத்திற்காக வைக்கப்படும். இதன்படி நேற்று முன்தினம் ஆருத்ரா தரிசன முதல்நாள் விழாவையொட்டி நடராஜன் மீது பூசப்பட்டிருந்த சந்தனக்காப்பு களையப்பட்டு பக்தர்களின் தரிசனத்திற்காக நாள் முழுவதும் வைக்கப்பட்டிருந்தது. இதனை தொடர்ந்து நேற்று காலை ஆருத்ரா தரிசன விழாவையொட்டி அதிகாலை 4 மணி அளவில் அருணோதய காலத்தில் சூரிய உதயத்திற்கு முன்னதாக அபூர்வ பச்சை மரகத நடராஜர் திருமேனி மீது புதிய சந்தனம் பூசப்பட்டது.

இதன்பின்னர் மரகத நடராஜருக்கு ஆருத்ரா தீபாரதனை நடைபெற்றது. மரகத நடராஜருக்கு பல்வேறு வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பின்னர் மனோரஞ்சித மலர் மற்றும் செண்பக மலர் சூடப்பட்டது. இதனை தொடர்ந்து நடராஜருக்கு பல்வேறு தீபாரதனைகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் வரிசையில் நின்று நடராஜரை தரிசனம் செய்தனர். விழாவையொட்டி ராமநாதபுரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சந்தீஷ் உத்தரவின் பேரில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜரை தரிசித்தால் நல்லது என்ற நம்பிக்கையில் ஏராளமான பக்தர்கள் நீண்ட கியூ வரிசையில் நின்று தரிசனம் செய்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபதாண்டு காலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் எ.வ.வேலு, . தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச்செயலாளர் முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நிதித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் உதயச்சந்திரன், நிதித்துறை துணைச் செயலாளர் (வரவு செலவு) பிரத்திக் தாயள், குழு உறுப்பினர் சண்முகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



2026 ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்மான எடப்பாடி கே.பழனிச்சாமியை அ.தி.மு.க. நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக அ.தி.மு.க. மகளிரணி செயலாளரும், செய்தி தொடர்பாளரும், முன்னாள் அமைச்சருமான பா.வளர்மதி நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, தலைமைச்செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 திருக்கோவில்களில் 18 புதிய திட்டப்பணிகள் மற்றும் ஒரு பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, 15 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோவில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள் மற்றும் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ஆர்.காந்தி, பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 621 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 129 தீயணைப்புத்துறை நிலைய அலுவலர்கள், என மொத்தம் 750 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்... (1-ம் பக்க தொடர்ச்சி)

அலுவலர்களின் குழந்தைகளுக்கான கல்வி முன்பணம் தொழிற்கல்விக்கு ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 1 லட்சமாகவும், கலை மற்றும் அறிவியல் கல்விக்கு ரூபாய் 25 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### 50 லட்சம் ரூபாயாக...

அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த திருமண முன்பணம் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், அதிகமாக, தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வீடு கட்டுவதற்கான முன்பணம் 40 லட்சம் ரூபாயிலிருந்து 50 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஒழுங்கு நடவடிக்கைகளால் பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்யப்படும் சூழ்நிலையை அகற்றி, அரசுப் பணியாளர்களை ஓய்வு பெற அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஓய்வூதியப் பணிக்கொடை ரூபாய் 20 லட்சத்திலிருந்து 25 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### கோரிக்கைகளை...

ஓய்வூதியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டு உதவி 10 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், அவர்களுக்கான பொங்கல் பரிசுத் தொகை ரூபாய் ஐநூறிலிருந்து ஆயிரமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. பெண் அரசு அலுவலர்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று, மகப்பேறு விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனில் முழுமையான அக்கறையுடன் முதல்வர் தலைமையிலான அரசின் சார்பில், பல்வேறு கோரிக்கைகள் பல்லாயிரம் கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் நாளன்று எவ்வளவு ஓய்வூதியம் பெறுவோம் என்று அறியாமல் ஓய்வு பெறும் நிலை கடந்த இருபது ஆண்டுகளாக இருப்பதாகவும், இதனை அகற்றி பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்கள் தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன.

### குழுவின் அறிக்கையை....

அவர்களின் இந்த நீண்டகாலக் கோரிக்கைகள் என்பது ஒவ்வொரு அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் குடும்பத்தினரின் வாழ்க்கையுடனும் அவர்களின் எதிர்காலத்துடனும் தொடர்புடையது என்பதை உணர்ந்து, முதல்வர் தலைமையிலான இந்த அரசு, இவற்றின் மீது முழுக்கவனம் செலுத்தியதுடன், இக்கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அரசு அலுவலர்களுக்கு முறையான ஓய்வூதியத்தை வழங்குவது குறித்து, தகுந்த பரிந்துரைகளை வழங்கிட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையையும் பெற்றுள்ளது.

### முதல்வர் ஆலோசனை.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் காப்பதில் உண்மையான அக்கறை கொண்ட இந்த அரசு, அந்த அறிக்கையை முழுமையாக ஆராய்ந்து, தமிழ்நாடு அரசு தற்போது சந்தித்து வரும் நிதிச் சூழலில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவு செய்வதற்கான வழிமுறைகள் குறித்து நிதியமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களிடம் முதல்வர் ஆலோசனை நடத்தினார். அந்த ஆலோசனையின் போது, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், நிதித்துறை அமைச்சர் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோரிடம் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அளித்த முக்கியக் கோரிக்கைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

### புதிய ஓய்வூதிய திட்டம்

அரசு அலுவலர்களின் நலன் மற்றும் எதிர்பார்ப்புகள், மாநிலத்தின் நிதிநிலை, எதிர்காலத்தில் அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு எவ்வித தடைகளுமின்றி முறையாக ஊதியமும், ஓய்வூதியமும் கிடைக்கச் செய்யவேண்டிய பொறுப்பு போன்ற பல அம்சங்களை சீர்தூக்கிப் பார்த்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் கிடைத்து வந்த ஓய்வூதியம் மற்றும் பல்வேறு பலன்களைத் தொடர்ந்து அளிக்கக்கூடிய புதிய திட்டமாக "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

### கூடுதலாக ரூ.13 ஆயிரம் கோடி...

இந்த திட்டத்தை அறிமுகப்படுத்துவதால், ஓய்வூதிய நிதியத்திற்கு கூடுதலாக தமிழ்நாடு அரசு 13 ஆயிரம் கோடி ரூபாய் அளிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் அரசின் பங்களிப்பாக வழங்க வேண்டும். இந்தப் பங்களிப்புத் தொகை பணியாளர்களின் ஊதியத்திற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் மேலும் உயரும். தற்போது தமிழ்நாடு அரசு சந்தித்து வரும் கடுமையான நிதிச்சூழலிலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக் காத்திடும் பொருட்டு, மேற்கூறிய செலவினங்களை தமிழ்நாடு அரசே முழுமையாக ஏற்றிடும்.

### முழு ஒத்துழைப்பை....

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனையும் அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தையும் மனதில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடனும் நடைமுறை சாத்தியங்களுடனும் கூடிய வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபது ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி, பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையான ஓய்வூதியத்தையும், பணப் பயன்களையும் பெற வழிவகுக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த திட்டத்தினை, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருமனதாக வரவேற்று, அதனைச் செயல்படுத்துவதற்கான முழு ஒத்துழைப்பையும் நல்குமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

# அனைத்துத் தரப்பினரின் கோரிக்கைகளை கேட்காமலே நிறைவேற்றும் தி.மு.க. அரசு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி பதிவு

சென்னை, ஜன. 04-

அரசு ஊழியர்களின் 20 ஆண்டு கால கோரிக்கையை தி.மு.க. அரசு நிறைவேற்றியுள்ளதாகவும், அனைத்துத் தரப்பினரின் கோரிக்கைகளும் கேட்காமலே நிறைவேற்றும் தி.மு.க. அரசு என்றும் நெகிழ்ச்சியுடன் முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

பழைய ஓய்வூதியத் திட்டம், காலிப் பணியிடங்களை நிரப்புதல், சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ, ஃபோட்டா-ஜியோ உள்ளிட்ட அமைப்புகள் போராட்டம் நடத்திவந்த நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

பழைய ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிலாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்ட'த்தை செயல்படுத்த முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்நிலையில் இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்: 20 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றிய தி.மு.க. அரசு.

நம்பி வாக்களித்த மக்களுக்கு, கழக அரசு எப்போதுமே உண்மையாக இருக்கும் என மீண்டுமொருமுறை செய்து காட்டியுள்ளோம். அரசு ஊழியர்களுக்கு மிகப் பெரும் புத்தாண்டு, பொங்கல் பரிசாக அறிவிப்பினை வெளியிட்டுள்ளோம். திராவிட மாடல் நல்லாட்சிதான் தொடரும் தலைநிமிர்ந்து வரும் தமிழ்நாட்டின் நிதி நிலை சீரடையச் சீரடைய அனைத்துத் தரப்பினரின் கோரிக்கைகளும் நீங்கள் கேட்காமலே நிறைவேறும் என்று பதிவிட்டுள்ளார்.

# மக்களிடம் கருத்து கேட்க... (1-ம் பக்க தொடர்ச்சி)

பரிந்துரைகளையும் கழகத்திற்கு வழங்கலாம்.

தொலைபேசி: 08069446900, வாட்ஸ்அப் (WhatsApp): 9384001724, மின்னஞ்சல்: dmkmanifesto2026@dmk.in, இணையதளம்: http://www.dmk.in/ta/manifesto2026, சமூக வலைத்தளங்கள்: dmkmanifesto26, செயற்கை நுண்ணறிவுத் தளம்: tnmanifesto.ai.

2021 சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் 505 தேர்தல் வாக்குறுதிகளை அளித்தது. அவற்றில் 364 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு செயல்பாட்டில் இருக்கின்றன. 40 அறிவிப்புகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மொத்தம் 404 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் இது 80 சதவீதம் ஆகும்.

மீதமுள்ள 101 வாக்குறுதிகளில் 37 வாக்குறுதிகள் மத்திய பாஜக அரசு ஒத்துழைக்காததால் நிலுவையில் உள்ளன. குறிப்பாக நீட் தேர்வு ரத்து, திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பது போன்ற வாக்குறுதிகள் மத்திய அரசின் ஒத்துழைப்பு கிடைத்தால் மட்டுமே நிறைவேற்றப்படக் கூடிய வாக்குறுதிகள் ஆகும். 64 திட்டங்கள் தற்போது நடவடிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்படாத சூழல் உள்ளது. உள்ளூர் போராட்டங்கள்- ஒத்துழைப்பின்மை, தேவைப்படாத சூழல் நிலவுவது போன்ற காரணங்களால் இந்த 64 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

தேர்தல் வாக்குறுதியில் அறிவிக்கப்படாமலேயே பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளது முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் அரசு. தமிழ்நாட்டு மக்களின் பேராதரவோடு அடுத்து அமையவிருக்கும் திராவிட மாடல் 2.0 அரசுக்கான தேர்தல் அறிக்கையை முனைப்புடன் தயாரித்து வருகிறது கழகம். திராவிடமாடல் 2.o அரசில் மக்களின் குரல்களும் வலுவாக ஒலிக்க வேண்டும் என்பதால் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களை, பரிந்துரைகளை வழங்கி தி.மு.க. தேர்தல் அறிக்கைதயாரிப்பில்எல்லோரும் பங்கு பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் நடைபெறவிருக்கும் ஜல்லிக்கட்டு முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தொடர்புடைய அலுவலர்களுடன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் பிரவீன்குமார், மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.




வீரபாண்டிய கட்டபொம்மனின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது உருவச்சிலைக்கு மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ, கே.டி.ராஜேந்திர பாலாஜி மற்றும் வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ.ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட பகுதி, வட்ட, அனைத்து சார்பு அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.